Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 17 திங்கட்கிழமை (03.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 034

## மரணதண்டனை தீர்ப்பை நீக்கி மீனவர் விடுதலைக்கு உதவுங்கள்

### ஆயர் இல்லம் முன் கவனயீர்ப்பு போர்

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று மீனவர்களுக்குமான தீர்ப்பை நீக்கித் தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி மீனவர்களது உறவினர்கள் யாழ்.மறைமாவட்ட ஆயர் இல்லம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்ட (19)ஆம் பக்கம் பார்க்க...

## மீனவருக்கான நீதிமன்ற தீர்ப்பை எதுவுமே செய்துவிட முடியாது

### யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மரணதண்டனை வழங்கப்பட்ட மீனவர்களுக்கான தண்டனை விடயத்தில் நீதிமன் றத்தின் தீர்ப்பை எதுவும் செய்து விட முடியாது என யாழ்.மாவட்ட குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

குறித்த மீனவர்களது உறவினர்கள் நேற்றைய தினம் யாழ். ஆயர் (19)ஆம் பக்கம் பார்க்க...

## மீனவரின் மரணதண்டனைத் தீர்ப்பு மேன்முறையீட்டிற்கு கோரிக்கை



### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களுக்கான தண்டனை குறித்து மேல் முறையீடு செய்யுமாறும் தானும் இது குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறுவதாகவும் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடாத்தி ஜனாதிபதிக்கான மகஜரைக் (19)ஆம் பக்கம் பார்க்க...

## மரணதண்டனை விதிக்கப்பட்ட மீனவருக்கு கருணை காட்டுங்கள்

### ஜனாதிபதிக்கும் மகஜர் கையளிப்பு



போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் 8 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றினால் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்தும் தண்டனை விதிக்கப்பட்ட யாழ்ப்பாண மீனவர்கள் மூவரினதும் உறவினர்களும், கிராம மக்களும் கருணை காட்டுமாறு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் தலைமையலுவலகத்திற்கு முன்னால் நேற்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான மகஜரை அமைச்சர் (19)ஆம் பக்கம் பார்க்க...

# பேச்சுக்கான நிபந்தனைகள் குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு வேண்டும்



### கூட்டமைப்பிற்கு கூறுகிறது அரசு

(கொழும்பு)

நிபந்தனையின் அடிப்படையில் அரசுடன் பேசத் தயாரென கூட்டமைப்பு தன்னிச்சையாகத் தெரிவித்துள்ளதே தவிர அந்த நிபந்தனைகள் என்ன என்பதனை உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் உத்தியோகபூர்வமாக நிபந்தனைகளையோ ஏனைய விடயங்களையோ கூட்டமைப்பு முன்வைக்கவில்லை என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமாயின் அது குறித்து அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவும் வர முடியும் என (19)ஆம் பக்கம் பார்க்க...

## வட்டுக்கோட்டையில் விபத்து; மாணவன் தலை சிதறிப் பலி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவன் ஒருவன் தலை சிதறிப் பலியானார்.

நேற்றுப் பிற்பகல் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நடராசா சுபேசன் (வயது-16) என்ற மாணவனே பலியானவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த மாணவன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை மீறி அருகில் இருந்த மதிலில் மோதி விபத்துக்குள்ளாகியே தலை சிதறிப் படுகாயமடைந்து உயிரிழந்ததாகத் (19)ஆம் பக்கம் பார்க்க...

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை நாடாளுமன்றமே நீக்க முடியும்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்றில் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மட்டும் முடியாதெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது எனக்குத் தெரியாது.

ஆண்டின் முதல் அரையாண்டு பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாலும் அரசியல் சாசனத் திருத்தங்களை மேற்கொள்ள கால அவகாசம் தேவை.

சில கட்சிகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஆறு மாத காலத்தில் இல்லாமல் செய்வதாக வாக்குறுதி அளித்து வருகின்றன.

எனினும், நாடாளுமன்றின் பெரும் பான்மை பலமின்றி எவராலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய முடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் 



தேர்தலின் போது ஜனாதிபதி மகிந்தவிற்கு சவால் விடுக்க எவருக்கும் முடியாது.

2010 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் பிரஜைகள் கூட இலங்கைக்கு வந்து வாக்களித்தனர் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் இவ்வாறன ஓர் நிலைமையை எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C3775)

# கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு 62 ஆயிரம் மில்லியன் செலவிடப்பட்டுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு கடந்த ஐந்து வருடங்களாக 62 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. எமது மிகக்கடுமையான உழைப்பே இம்மாவட்டத்தில் இப்பாரிய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு வழிவகுத்தது என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி யூனியன்குள பிரதேசத்திற்கான மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாண சபைக்கு கடந்த வருடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் மில்லியன் ரூபாவில் 25 விகிதம் மட்டுமே செலவிடப்பட்டிருக்கின்றது. மக்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் உண்மைகள் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன.

நுறை ரீதியான ஒதுக்கீடுகளில் வடமாகாண கல்வித்துறைக்கு 277 மில்லியன் ரூபா பிரமாண அடிப்படையிலான நிதியில் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை 55 மில்லியன் ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றது.

ஆனால் இங்கு பல கிராமங்களில் ஆரம்ப கல்விப் பாடசாலைகள் கட்டடங்களின்றி தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றன. வருட முடிவுக்கு இன்னும் 60 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாதுள்ள பணத்தை செலவு செய்து முடிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிடுகின்றனர்.

அப்பெருந்தொகையான பணத்தைக் கொண்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதென்பது சாத்தியமற்றது. ஆகவே அந்த நிதி மீளவும் திரைசேரிக்கே செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்கம் நிதி எதுவும் மாகாணத்திற்கு தரவில்லை என குறிப்பிட்டவர்கள் இப்போது இவ்வருடத்திற்குள் அப்பணத்தை செலவு செய்துவிடுவதாக குறிப்பிடுகின்றார்கள்.

ஆகவே அரசாங்கம் நிதி வழங்கியது என்பதை இப்போது தான் அவர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள்.

எவ்வாறாயினும் மக்களின் நலத்திட்டங்களுக்காக கிடைக்கப் பெறும் நிதிவளங்களை பயனற்றதாக மாற்றவேண்டாம் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

யூனியன்குளம் பகுதிக்கு மின் இணைப்பை ஏற்படுத்துவதற்காக உயரழுத்த இணைப்புக்களும் 7 கிலோமீற்றர் விநியோக இணைப்புக்களும் ஏற்படுத்தப்பட்ட நிலையில் இதற்காக சுமார் 17 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் இராமச்சந்திரன். வடக்கின் வசந்த மின்பொறியியலாளர் அமலடயஸ், வடக்கின் வசந்த மின் அத்தியட்சகர் சமிந்த, கிராமசேவையாளர் சபாரட்ணம் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரகலாதன் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் புஸ்பாகரன் மற்றும் துஸ்ய நதினி ஆகியோரும், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பெரும் திரளான மக்களும் கலந்து கொண்டனர்.


சனிதா வசனாவ
சுப்பர் சனிக்கிழமை அதிர்ஷ்டம்
Super Saturday Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2577 திகதி 01-11-2014

ஆங்கில எழுத்து: U

வெற்றி எண்கள்: 17 19 24 25

போனஸ் இல: 11

ஜக்பொட் பரிசு ரூ.15,396,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 471311 | 20/- | 9,426,220/- |
| 2 இல | 33571 | 100/- | 3,357,100/- |
| 3 இல | 705 | 1,000/- | 705,000/- |
| 4 இல | 03 | 1,000,000/- | 3,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18837 | 40/- | 753,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 1345 | 1,000/- | 1,345,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 25 | 10,000/- | 250,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,396,550/- | - |
| 1 இல + போனஸ் இல | 22508 | 100/- | 2,250,800/- |
| 2 இல + போனஸ் இல | 1061 | 500/- | 530,500/- |
| 3 இல + போனஸ் இல | 10 | 100,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 890 | 200/- | 178,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 40 | 1,500/- | 60,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 550326 | | 26,856,100/- |

தங்க நகைக் குவியல்களை வென்றவர்களின் 20 வெற்றி இலக்கங்கள

| | | | |
|---|---|---|---|
| 1. 7221134 | 2. 7121630 | 3. 4452687 | 4. 5025057 |
| 5. 3121734 | 6. 6787496 | 7. 7186446 | 8. 4237309 |
| 9. 2493321 | 10. 4893531 | 11. 8492887 | 12. 0581634 |
| 13. 3136389 | 14. 4220841 | 15. 0360047 | 16. 4828344 |
| 17. 9063472 | 18. 7290680 | 19. 9130749 | 20. 4589507 |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.11.05 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 16,682,875/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


# பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்க்க நடவடிக்கை


(யாழ்.நிருபர்)

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒக்ரோபர் 31 இல் வெளிவந்துள்ள அரச வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ள 21 - 35 வயதுக்கிடைப்பட்ட விண்ணப்பதாரிகள் எழுத்து மூல மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 2014.12.01 ஆகும். மேலதிக விபரங்களை ஒக்ரோபர் 31 அரச வர்த்தமானியில் பார்வையிடமுடியும். (10)

# நொச்சிக்குளம் கிராமத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய பிரதித் தூதர் எஸ்.டி.மூர்த்தி கடந்த 30 ஆம் திகதி வவுனியா தெற்கு டிவிசனில் உள்ள நொச்சிக்குளம் கிராமத்திற்கு விஜயம் செய்து, அக்கிராமத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலம் கட்டப்படும் 43 வீடுகளை பார்வையிட்டார்.

மிகவும் பின்தங்கிய இக்கிராமத்தில் வசிக்கும் 200 மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் மிகவும் பயன் உள்ளதாக மக்கள் தூதரிடம் தெரிவித்தனர்.

அந்த கிராம குழந்தைகளுக்கு கற்றல் பொருட்களை தூதர் வழங்கினார். இம்மக்கள் தெலுங்கு மொழி பேசுபவர்கள். சிங்கள மொழியும் அறிந்துள்ளனர். தங்கள் தாய் மொழியான தெலுங்கு மொழியை கற்பிக்க உதவி செய்யும்படியும் வேண்டுகோள் விடுத்தனர்.

# 1000 ரூபா போலி நாணயத்தாள் வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

அச்சுவேலி பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் 1,000 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாளை வழங்கி பொருள் கொள்வனவில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரை, எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா உத்தரவிட்டுள்ளார்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் கடந்த வெள்ளிக்கிழமை அச்சுவேலியிலுள்ள கடையொன்றில் பொருட்களை கொள்வனவு செய்ததன் பின், 1000 ரூபாய் நாணயத்தாளை கடைக்காரரிடம் கொடுத்துள்ளார்.

சந்தேகநபர் வழங்கிய தாள் போலியென்பதை கண்டறிந்த கடைக்காரர் இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரை கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## கணிதபாடப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் அனுசரணையுடன் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு கணிதபாடப் பயிற்சி வகுப்புகள் வித்தியாலய அதிபர் அ.மி.கி.மகேந்திரன் ஒத்துழைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது. (27)

## உலருணவுப் பொருட்கள் சேகரிப்பு

பதுளை மாவட்டம் கொஸ்லந்த மீரியபெத்த பகுதியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மலையக உறவுகளுக்கு உதவும் பொருட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் உலருணவுப் பொருட்கள் சேகரிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் உலருணவுப் பொருட்கள் சேகரிப்பு பணியில் ஈ.பி.டி.பி.யினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

# மலையக மக்களுக்கு மனிதநேய உதவி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மலையகத்தில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குருநகர் சென்.ஜேம்ஸ் ஆலய பங்கு இளைஞர்களால் பங்கு மக்களிடம் நேற்று சேகரிக்கப்பட்ட 85 ஆயிரம் ரூபா நிதியும் உடனடி பாவனைக்கான உடுப்பு வகைகளும் பங்குத்தந்தை ப.பத்திநாதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் உபயப் பொருட்களும், நிதியும் இன்று கரித்தாஸ் கியூடெக் இயக்குநரிடம் சேர்க்கப்பட்டு நிவாரணம வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(27)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3800)

# மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வுக்கு சி.பி.ஆர்.திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

சமூகசேவைகள் அமைச்சின் மாற்றுத்திறனாளிகளின் சமுதாய மட்ட புனர்வாழ்வு திட்டமான சி.பி.ஆர். திட்டத்தின் கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் ஒரு விழிப்புணர்வு செயற்றிட்டமும் 4 பிரதேச செயலகங்கள் தோறும் தலா ஒரு விழிப்புணர்வு செயற்றிட்டமும் நடைபெறவுள்ளது.

மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறி நிவாசன் அமைச்சினால் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சின் மாவட்ட மட்ட செயற்பாடுகளுக்கு கண்டாவளை பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சுப்பிரமணியம் ஜெயானந்தராசா நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர், அமைச்சின் மாவட்ட இணைப்பாளருடன் இணைந்து இதற்கானசெயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளார்.

வருடாவருடம் சமூகசேவைகள் அமைச்சு இத் திட்டத்திற்கான செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக நிதியை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிதியின் மூலமாக சி.பி.ஆர். திட்டத்திற்கென பிரதேச செயலக பிரிவுகள் தோறும் பயிற்றுவிக்கப்பட்ட தொண்டர்கள் மூலமாக விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. இதன் மூலமும் சி.பி.ஆர்.தொண்டர்களின் ஏனைய செயற்பாடுகள் மூலமாகவும் மாற்றுத்திறனாளிகளிற்கு பலவித பொருத்தமான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(90)

# அனலைதீவு பொது நூலகத்துக்கு விருது



(அனலைதீவு)

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினரால் மேற்கொள்ளப்பட்ட 2013 ஆம் ஆண்டின் பொது நூலகங்களின் பேணல் நடவடிக்கை தொடர்பாக, மாகாண மட்டத்தில் பிரதேச சபை ரீதியாக சிறந்த நூலகத்தை தெரிவு செய்தல் நடவடிக்கையின் கீழ், வடக்கு மாகாணத்தில் முதலாவது இடத்தை பொது நூலகம் பெற்றுக்கொண்டது.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பவுண்டேசன் நிறுவன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத தேசிய விழாவில் வைத்து இந்நூலகத்துக்கான விருது வழங்கப்பட்டது. இதில் அனலைதீவு பொது நூலக நூலகர் திருமதி தர்மிளா செந்தூரன் விருதினை பெற்றுக்கொண்டார்.

# மரியன்னை பேராலயத்தால் உதவிப் பொருட்கள் திரட்டு



(யாழ்ப்பாணம்)

பதுளை மாவட்டத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்கத்திருச்சபையினரால் உதவிப்பொருட்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

நேற்று யாழ்.மரியன்னை பேராலய பங்கில் உள்ள மக்களிடம் உதவிப்பொருட்கள் மற்றும் பணம் என்பன சேகரிக்கப்பட்டன. இவ் உதவிப் பொருட்கள் சில இடங்களில் வாகனங்கள் மூலமாகவும் சேகரிக்கப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளன. (பா)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் –23




இனப்பிரச்சினைக்கான தீர்வு எண்டது தனியே மேசையில் உட்கார்ந்து கொண்டு, சட்டநிர்ணங்களைப் பற்றி இரண்டு தரப்புச் சம்பந்தப்பட்டுப் பேசுவதில்லை. அப்பிடிப் பேசி முடிவெடுக்கவும் முடியாது.

இது ஒரு மிகச் சிக்கலான பிரச்சினையாக உள்ளது.

உளவியல் ரீதியாக, சட்டநியமங்கள் ரீதியாக, காணி போன்ற நிலம் மற்றும் பிரதேசம் என்ற ரீதியாக, நீதி பரிபாலன ரீதியாக, மொழிப் பிரயோக ரீதியாக, மத ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, வளப்பகிர்வு ரீதியாக எனப் பல வகைப்பட்டிருக்கு.

பலரும் கருதுவதைப்போல அது தனியே அதிகாரப்பகிர்வுடன் (காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான அதிகாரப்பகிர்வாக) சம்பந்தப்பட்டதல்ல.

பிற சமூகங்களின் திருப்தியும் ஆதரவும் தேவையானது.

இதையெல்லாம் கவனத்திற் கொள்ளாதவரையில் எப்படித்தான் முயன்றாலும் உருப்படியான காரியங்கள் எதுவும் நடக்கப்போவதில்லை.

இதையெல்லாம் பொருட்படுத்தால் நடந்தபடியால்தான் இதுவரையில நடந்த அத்தனை பேச்சுவார்த்தைகளும் சமாதான முயற்சிகளும் பயனில்லாமல் போய்விட்டன.

ஆனால், இதற்குப் பிறகும் எந்தப் புதிய முயற்சிகளும் இல்லாமல், எந்தமாதிரியான மாற்றங்களும் இல்லாமல் பழைய குருடி கதவைத் திறவடி எண்ட மாதிரியே 'அரசாங்கத்தோட நாங்கள் மட்டும்தான் பேசுவோம். நாங்கள்தான் ஏகப்பிரதிநிதிகள். தமிழருடைய அடையாளத்தையும் அரசியல் மேன்மையையும் அங்கீகரிக்க வேணும்....' எண்டு சொல்லுவினம்.

அப்பிடியில்லையெண்டால், 'அரசாங்கத்தோட பேசிறதில பயனில்லை. அரசாங்கம் பேச்சுக்கு வரச்சொல்வது ஒரு தந்திரோபாயமான நடவடிக்கை. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக நடத்தப்படுகிற நாடகம்' எண்டெல்லாம் தவில் வாசிப்பினம்.

இதுதான் கடந்த காலம் முழுவதும் நடந்து வந்தது. இப்பவும் இதுதான் கதை.

எனவேதான் இந்தச் சிக்கலான பிரச்சினையை அதற்குரியவாறான அணுகுமுறைகளின் ஊடாகக் கையாள வேணும் எண்டு சொல்கிறேன்.

இதைச் செய்ய வேணும் எண்டால் இந்தப் பிரச்சினையை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து கொண்டு செயற்பட வேணும்.

இதுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேணும் எண்டு உண்மையாகவே அக்கறைப்படுகிற ஆட்கள் பொருத்தமான முயற்சிகளை எடுக்க வேணும்.

அரசியல்வாதிகள் தங்களுக்கு வசதியான வழித்தடத்தில் பயணிப்பதால் அவர்களை நம்பிப் பிரயோசனம் இல்லை.

இந்த இடத்தில் அரசியல்வாதிகளை சரியான வழிக்குக் கொண்டு வரக்கூடிய மாதிரி பத்திரிகைகளும் பிற ஊடகங்களும் செயற்பட வேணும்.

சமூகத்தில் இயங்குகின்ற புத்திஜீவிகள் முன்னின்று உழைக்க வேணும்.

இதை உணர்ந்தவர்கள் ஒரு அணியாகவோ பல அணியாகவோ செயற்பட்டு ஒரு அழுத்த நிலையை உண்டாக்க வேணும்.

இதேவேளை ஒவ்வொருதரப்பும் கடுமையாக முயற்சி செய்து பிற சமூகங்களுடன் உரையாடல்களைச் செய்ய வேணும்.

யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்த ஐந்து ஆண்டுகளில் சிங்களப் பொதுமக்களுடன் எத்தனை தமிழ்ப் பொது மக்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேணும் எண்டு உரையாடியிருக்கினம்?

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனைபேர் சிங்கள மாணவர்களுடன் மனம்விட்டுப் பேசி இந்தப் பிரச்சினையை எடுத்துரைத்திருக்கின்றனர்.

அப்பிடிச் செய்திருந்தால் அந்த மாணவர்களை இங்கே வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அழைத்து வந்து உண்மை நிலையை – மக்களின் பாதிப்புகளையும் பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகளையும் காண்பித்திருப்பார்கள். சனங்களுடன் உரையாடல் நடந்திருக்கும்.

தமிழ்ப் புத்திஜீவிகளில் எவராவது இதுவரையில் முஸ்லிம் சமூகத்தினருடன் உரையாட வேணும் எண்டு சிந்தித்து அதற்காக முயற்சித்திருக்கிறார்களா? அப்பிடி முயற்சித்திருந்தால் அதன் பயன் என்ன?

தமிழ்ப் படைப்பாளிகளும் சிங்களப் படைப்பாளிகளும் தமிழ்க் கிறிஸ்தவர்களும் சிங்களக் கிறிஸ்தவர்களும் உரையாடியிருக்கிறார்களா?

இந்து சமயத்தினரும் பௌத்த சமயத்தினரும் சந்தித்துக் கதைத்துப் பேசி வருகிறார்களா?

இப்பிடி பல தரப்பினரும் இந்தப் பிரச்சினைக்கான தீர்வுக்காக முயற்சிக்க வேணும்.

அப்பிடி முயற்சிக்காமல் இருந்து கொண்டு, அரசியல்வாதிகள்தான் எதையாவது பெற்றுத்தரவேணும். அவர்களால்தான் இது முடியும். அவர்களுக்கே இந்தப் பொறுப்பும் கடமையும் உண்டு என்று நினைத்தோமானால்..

மீண்டும் நாங்கள் நெருப்பிலும் இருளிலும் இருண்ட காலத்திலும்தான் வாழ வேண்டியிருக்கும்.

ஒவ்வொருவருக்குமான கடமைகளை ஒவ்வொருவரும் செய்யும்போதே உள்ள பிரச்சினை தீரும்.

எதைப்பற்றியும் சிந்திக்காமல் விதைத்தவனுக்கு எந்தச் செயல் நிறைவேற்றமும் ஏற்படவில்லை. - பார்பர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'சுதந்திரன்' காலத்திற்குத் திரும்புதல்!

வடக்கில் வரும் தமிழ்ப் பத்திரிகைகளைக் காலையில் பிரித்துப் பார்க்கும் தமிழர் எவரும் பதற்றம் கொள்ளாமல் இருக்க முடியாது. போர்ச் சூழலிலும் எதிரிகளின் மத்தியிலும் தான் இப்போதும் இருந்துகொண்டிருக்கிறோம் என்றே நம்ப வைக்கின்றன.

"இலங்கை அரசினுடைய நடவடிக்கைகள் தமிழ் மக்களைப் பிரிந்து தனித்து வாழவே தூண்டுகின்றன" என்று ஆவேசமாகச் சொல்லியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

கொழும்புப் பாராளுமன்றத்திலேயே நம் பிரதிநிதிகள் இப்படி முழங்குகிறார்கள் என்றால்... இப்படியே போகுமென்றால்... நமக்குத் தனிநாடு சாத்தியம்தான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொள்கிறது சாதாரணத் தமிழ்மகனின் மனது.

அதை மேலும் வளர்த்தெடுக்கும் விதமாக, புலிகள் இருந்த காலத்தில் கூட முழங்கியிருக்காத சவால்களையெல்லாம் எடுத்து விளாசி, போர்ச் சூழலே தொடர்ந்து கொண்டிருக்கிறது என்ற பிரமையை உண்டாக்குகிறார் கூட்டமைப்பு எம்.பி.

அதுமட்டுமல்லாமல் புலிகள் காலத்துக்கும் முன்னால் போய் காசி ஆனந்தன், கோவை மகேசன் காலத்து வார்த்தைகளைத் திரும்பவும் கொண்டுவந்து பழைய உசுப்பேத்தலை மீண்டும் நடத்துகிறார். பாராளுமன்றத்தில் அவர் பேசியதாக பத்திரிகைகளில் வந்திருக்கும் வார்த்தைகளைப் பாருங்கள்:

"ஈழத்தமிழர் அடங்கிப்போகவும் மாட்டார்கள், மண்டியிடவும் மாட்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்திருந்தாலும், ஈழத் தமிழர்களை இவர்களால் வென்றெடுக்க முடியாது. அதுவும் யாழ்ப்பாணத் தமிழர்களை ஒருபோதும் வெல்லவே முடியாது..." என்றும் இன்னும் பலவுமாக தமிழ்வீரக் கொடிக்கம்பத்தை வாய்ப் பேச்சில் நட்டு நிமிர்த்துகிறார்.

இதைக்கேட்டு, சாதாரணத் தமிழ்மகன் "தமிழ்வீரம் இன்னும் செத்துவிடவில்லை" என்று கிறுகிறுத்துப்போவான் என்பது அவருக்குத் தெரியும். தங்களது இந்தத் தலைவர்கள் சிங்களவர்களைப் பணியவைத்துத் தமிழ்த்தனிநாட்டுக் கொடியைப் பறக்க விடப்போகும் நாளுக்குக் காத்திருப்பான். ஆண்டபரம்பரை மீண்டும் ஆளப்போகும் கனவுக்காக உணர்ச்சியோடு தேர்தலில் வாக்குகளைப் அள்ளிப் போடுவான் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் நம்பலாம், சரி.

ஆனால் தலைவர்களின் இந்த மாய்மால ஏமாற்றைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்புடைய ஊடகத்தினரும் புத்திஜீவிகளும் இந்தப் புதிய காசி ஆனந்தன் கோவை மகேசன்களுக்கு ஒத்தூதித் தலையாட்டி எழுதிக்கொண்டிருப்பதைத்தான் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

'சுதந்திரன்' காலத்தைச் சுரேஷ் கொண்டுவருகிறார் என்றால், நாரந்தனையில் மரம் நடப்போன இடத்தில் பகையை நட்டு வளர்க்கிறார் வடக்கு முதலமைச்சர். இன உணர்ச்சியை எழுப்பிப் பேசினால் தமிழர்கள் மற்றெல்லாக் குறைகளையும் மறந்து விட்டுச் சிங்களவனுக்கெதிராகப் பொங்கிநிற்பார்கள் என்ற அதி விவேகம் அவருக்கு.

"இன்று ஏ-9 வீதியில் மரங்கள் இருந்த இடங்களில் இராணுவக் கடைகளும் குடியேற்றப்பட்ட அந்நியர்களும் குடியிருக்கிறார்கள்" என்று பொங்கியிருக்கிறார் அவர். அரசின் தவறான குடியேற்றங்களைப் பற்றிப் புள்ளிவிவரங்களுடன் இவர்கள் எடுத்துக் காட்டுவதில்லை என்ற குறைபாடு ஒருபுறம் இருக்கட்டும்.

"அந்நியர்கள்" என்று யாரைச் சொல்கிறார். இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்தில், மத்திய அரசிடம் கேட்டு வாங்கி, வீட்டுக்கு மூன்று லட்சம் வாடகை கொடுத்து வாழ்ந்துகொண்டு, இந்த நாட்டில் இருக்கும் இன்னொரு இனத்தினரை "அந்நியர்கள்" என்று சொல்வது என்ன ஒரு திமிர்த்தனம்?

அந்த "அந்நியர்கள்"தான் இவரது சம்பந்திகளாகவும் இருக்கிறார்களல்லவா? அப்படியானால் அந்த வார்த்தைப் பிரயோகம், எளிதில் உணர்ச்சிவசமாகும் தமிழர்களை வெறும் பேச்சால் ஏமாற்றுவதற்குத்தானே?

இந்த நாட்டின் இராணுவத்தினரைக் கூட அந்நியர்கள் என்று கூறி, வடக்கிலிருந்து முற்றாக வெளியேறச் சொல்வது சரியா அல்லது சாத்தியம்தானா? எப்படி ஏமாற்றுகிறார்கள் பாருங்கள்!

- ஆசிரியர்



### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

*"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்."*

— தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

# தேர்தல் திணைக்களத்தின் சுயாதீனம் சர்மாவின் கருத்துக்கு கண்டனம்

## அதிகாரிகள் அதிருப்தி

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவின் கருத்துக்கு தேர்தல் திணைக்களம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் திணைக்களம் முழு அளவில் சுயாதீனமாக இயங்குவதில்லை என அண்மையில் கமலேஷ் சர்மா தெரிவித்திருந்தார். இந்தக் கருத்திற்கு தேர்தல் திணைக்களம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

தேர்தல் திணைக்களத்தின் மீது எவரும் அழுத்தங்களை பிரயோகிப்பதில்லை என பிரதித் தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு தரப்பினரும் அழுத்தங்களையோ இடையூறுகளையோ ஏற்படுத்துவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் திணைக்களப் பணிகள் சுயாதீனமான முறையில் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## இளைஞர் விருதுப்போட்டி கிழக்கில் கோலாகலம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் விருதுப் போட்டி நேற்றுமுன்தினம் காலை முதல் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என்.நைறுஸ் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான போட்டிகள் இடம்பெற்ற நிலையில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்ட இப் போட்டியில் அறிவிப்பு, பேச்சு, இளம் பாடகர், நாட்டார் பாடல், கிராமிய நடனம், பரதநாட்டியம், அபிநய நடிப்பு எனப் பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன.

இப் போட்டியின் ஆரம்ப விழாவில் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கே.தவராசா, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான திருமதி ஜே.கலாராணி, திருமதி அ.நிசாந்தி மற்றும் இளைஞர் சேவை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## தங்கம் கடத்தியவர் கைது

(கொழும்பு)

வடபகுதியில் இருந்து இந்தியாவுக்கு சட்ட விரோதமாக தங்கத்தைக் கடத்தும் ஒருவர் சென்னையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்திய பாதுகாப்புப் பிரிவினரால் சென்னை அண்ணா நகரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர் கைதாகியுள்ளதாக இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

சந்தேகநபர் வசமிருந்து, இரண்டரைக் கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள ஒன்பது கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த தங்கத்தை இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்திற்கு கடல் மார்க்கமாக கடத்தியதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்பு பாக்.பிரஜைகள் அறுவர் கைது

(கொழும்பு)

தெல்தெனிய - மொரகோல்ல பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆறு பாகிஸ்தானியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் வாகனம் ஒன்றில் பொருட்கள் கொள்வனவு செய்வது போல் வந்த இவர்கள், வர்த்தக நிலையத்தில் இருந்த, 40,000 ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர்.

இது குறித்து தெல்தெனிய பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களுள் நான்கு பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சுயதொழில் முயற்சியாளர்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சு, அங்கவீனமுற்றோர் தேசிய செயலகத்தினூடாக வழங்கப்பட்ட சுயதொழில் கொடுப்பனவுகளை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களூடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சுயதொழில் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாய் தொடக்கம் 25 ஆயிரம் ரூபாய் வரை பயனாளிகளுக்கு அமைச்சின் செயலகம் வழங்கியுள்ளது.

இச்சுயதொழில் கொடுப்பனவுகளைக் கொண்டு பயனாளிகள், கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில், விவசாயம், சிறு கடை ஆகிய சுயதொழில் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள சுயதொழில் முயற்சிகளை மதிப்பீடு செய்வதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலகங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் நிதியை அனுப்பி வைத்துள்ளது.

பிரதேச செயலகங்களிலுள்ள சமூக சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர்கள், சுயதொழில் கொடுப்பனவுகள் மூலம் சிறந்த வெற்றியை அடைந்த பயனாளிகளின் சுயதொழில் செயற்பாடுகளை வீடியோ பதிவு செய்து அதனை அமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இந்நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கறுப்பு ஒக்ரோபர்

# 75 ஆயிரத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 24 வருட பூர்த்தி

**சுமார் 20 வருடங்களாக யுத்தத்தின் காரணமாக சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாமல் தவித்த வடமாகாண முஸ்லிம்கள், தற்போது யுத்தம் நிறைவு பெற்றுள்ள இந்நேரத்திலும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறி சுதந்திரமாக வாழ்வதற்கு வழியின்றித் தவிக்கின்றனர். அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு காணி, தொழில், சுகாதாரம், கல்வி, நிர்வாகம் என பல்வேறு பிரச்சினைகள் தடையாக இருக்கின்றன. இவைகளை அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், முஸ்லிம் சமூக நிறுவனங்கள் தீர்த்துத் தருமா?**

அபூ ஆயிஷா



**1990** ஒக்ரோபர் மாதம் இறுதி வாரத்தில் வடமாகாணத்தில் வாழ்ந்த சுமார் 75 ஆயிரத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள், 24 மணி நேர அவகாசத்தில், விடுதலைப் புலிகளால் சொத்துக்கள் எல்லாம் பறிக்கப்பட்ட நிலையில், உடுத்திய உடையுடனும், சுமார் 300 ரூபா கைப்பணத்துடனும் ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டு இம்மாதத்துடன் 24 வருடங்களா கின்றன.

24 வருடங்களாக இம்மக்கள் வாழ் வதற்கு சொந்த இடமின்றி, தொழில் செய்வதற்கு தகுந்த தொழிலின்றி அகதி முகாம்களிலும், மீள்குடியேற்றக் கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தம் முடிவுற்ற பின்னரும் ஏன் இம்மக் கள் சொந்த இடங்களில் மீள்குடியேறச் செல்லவில்லை. அங்குள்ள தொழில் களைச் செய்து தமது பொருளா தாரத்தை வளர்த்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அங்குள்ள கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை மேம் படுத்துவதற்காக முயற்சிக்காமல் புத்தளம் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள அகதி முகாம்களிலும், மீள்குடியேற்ற கிராமங்களிலும் வாழ் கிறார்கள்? இவற்றுக்கான காரணம் என்ன? இவற்றுக்குத் தீர்வே இல்லையா?

மீள்குடியேற்றத்தைத் தடுப்பதில் முதன்மையானது காணிப் பிரச்சினை.

1990 ஆம் ஆண்டு வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டபோது சுமார் 75 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இருந்தார்கள். அப்போது சுமார் 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் குடும்பங் கள்தான் இருந்தன. இவை தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ளன. இவ்வாறு அதிகரித்தவர்களுக்கு குடியிருப்பதற்கு போதிய காணி வசதி இல்லை. இதுவரை அரசாங்கமும் அவற்றைத் தீர்த்து வைக்க முயற்சிக்கவுமில்லை.

உதாரணமாக மன்னார் மாவட்டத்தில், மன்னார் தீவுப்பகுதி மற்றும் மாந்தைப் பகுதியில் மீள்குடியேறுகின்றவர்களுக்கு குடியிருப்பு காணி மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகள் இன்னமும் நிறைவேற்றிக் கொடுக்கப்படவில்லை.

மன்னார் முசலி மற்றும் நானாட்டான் பகுதியில் குடியேறுகின்ற மக்களுக்கும் போதிய குடியிருப்புக் காணி வசதி கள் இதுவரை செய்து கொடுக்கப்பட வில்லை. முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கும் குடியிருப்புக்கான காணி வழங்கப்பட வில்லை. இவர்கள் மீள்குடியேற வழியின்றி, இன்னமும் புத்தளம் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள அகதி முகாம்களிலும், மீள்குடியேற்றக் கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், முஸ்லிம்கள் வாழ்ந்த முக்கிய சில நகரங்கள், வீடுகள் உரியவர்களுக்கு இன்னும் வழங்கப் படாமல் கடற்படையினரின் பராமரிப் பில் இருக்கின்றன. அவை பாதுகாப்புக் காரணங்களுக்காக கைப்பற்றப்பட் டுள்ளதாக தெரிவிக்கின்றனர். இவைகள் குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகளோ ஏனைய முஸ்லிம் சிவில் அமைப்புக் களோ இதுவரையில் எதுவும் பேசவு மில்லை, செய்யவுமில்லை.

பாராளுமன்றத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து எத்தனை முறை பேசப்பட்டுள்ளன. ஆனால், முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் பேசியதாக இல்லை.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தைத் தடுக்கும் காரணி களில் இவை முக்கியமானவையாகும். இவற்றை உரிய முறையில் தீர்த்துக் கொடுப்பது உரியவர்களின் கடமை யாகும். இவற்றுக்கு நிரந்தரத் தீர்வின் றியே இம்மக்கள் அகதி முகாம்களிலும் தற்காலிக கொட்டில்களிலும் தொடர்ந் தும் வாழ்ந்து வருகின்றனர்.

வடமாகாண முஸ்லிம்கள் மீன்பிடி, விவசாயம் என்பவற்றையே தமது ஜீவ னோபாயத் தொழிலாகச் செய்கின்றனர். இவற்றில் பெரும்பாலானவர்கள் விவ சாயத்தையும் ஏனையவர்கள் மீன் பிடியையுமே மேற்கொள்கின்றனர். அது வும் வருடத்திற்கு ஒரு முறை மழையை நம்பி செய்யும் தொழிலாகவே விவ சாயத் தொழிலைச் செய்கின்றனர். அத்தொழிலையும் திறம்படச் செய் வதற்கு போதிய வசதிகளின்றி அவதிப்படுகின்றனர்.

கடும் மழையினாலும், கடும் வரட்சி யினாலும் மீள்குடியேறிய விவசாயிகள் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இறுதியில் தொழிலைக் கைவிட்டு பாரிய நஷ்டத்தை யும் அடைந்துள்ளனர்.

இவ்வாறு மீள்குடியேறியவர்கள் விவ சாயத்தில் எதிர்நோக்கும் பிரச்சினை களைக் கண்ட முகாம்களில் வாழ்கின்ற வடமாகாண முஸ்லிம்கள், மீள்குடியேறு வது குறித்து பலமுறை சிந்திக்கின்றனர்.

இந்திய மீனவர்களின் வருகையால் எம் மீனவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை அரசாங்க மும் கண்டு கொள்ளாமல் இருப்பதாக அம்மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்னமும் கடற்படையினரின் பாஸ் நடை முறையில் உள்ளது. அதாவது, கடற்படை யினரிடம் பாஸ் எடுக்கின்றபோது தொழிலாளிகள் மூவரின் பெயர்களை ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டவர்களேதான் தொழி லுக்குச் செல்ல வேண்டும். அவர்களில் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ சுகயீனம் ஏற்பட்டால் அன்றைய நாள் குறித்த நபர் இன்னொருவரை இணைத்துக் கொண்டு தொழிலுக்குச் செல்ல முடியாது. எனவே, அவரின் அன்றைய தொழில் பாதிப்படைகின்றது.

இப்படி எத்தனையோ தொழிலாளிகள் தொழில்களை இழக்கின்றார்கள். கடன் பட்டு ஆரம்பித்த தொழிலை கடன் சுமைகளையும் இறக்கிக் கொள்ள முடியாமல், குடும்பச் செலவு, பிள்ளை களின் கல்விச் செலவு என பல சுமை கள் அவர்களின் முதுகுகளில் சுமத்தப் பட்டுள்ளதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கின்றனர்.

இவர்களின் பிரச்சினைக்கு உண்மையான நிரந்தர தீர்வு கிடைக்குமா? அவர்களும் சுதந்திரமாக தொழில் செய்ய வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்படுமா? இவைகளுக்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள்? என்ற கேள்விகளோடு அலைகடல் மேலே அலையாய் அலை வது போல் இவர்களது வாழ்வும் அலைகிறது.

வடக்கில் பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகள் இன்னமும் கட்டிட வசதி களோ, துறைசார் பாட ஆசிரியர்களோ இன்றி காணப்படுகின்றன. இவ் இக்கட் டான சூழ்நிலையிலேயே மீள்குடியேறிய வர்களின் பிள்ளைகள் கற்று வருகின்றனர்.

வடமாகாணத்தைச் சேர்ந்த தரமான துறைசார் பாட ஆசிரியர்கள் இருக் கின்றார்கள். அவர்கள் புத்தளம் மற்றும் நாட்டின் ஏனைய பாகங்களில் தொழில் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்ற னர். அவர்களை வடமாகாண சபையின் கீழ் இயங்குகின்ற மாகாணப்பாடசாலை களுக்கு மாற்றம் செய்து வடமாகாணத் தின் கீழ் கொண்டு வருவதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

அவ்வாறு மாற்றத்தை மேற்கொண்டா லும், மீள்குடியேற வருகின்ற ஆசிரி யர்கள் குடியிருப்பதற்கு காணி, வீடு இன்றி தவிக்கின்ற நிலையே காணப்படு கின்றது. இவைகளுக்கு யார் பொறுப்பு?

துறைசார் பாட ஆசிரியர்களின் பற்றாக் குறையுடனும், பௌதீக வளப் பற்றாக் குறையுடனுமே வடமாகாண முஸ்லிம் பாடசாலைகள் இயங்குகின்றன. இவை களை கருத்தில் கொண்டும் வெளியேற் றப்பட்ட பெரும்பாலான முஸ்லிம்கள் மீள்குடியேறாமல், தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், மீள்குடியேற்றக் கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அங்கு தங்களது பிள்ளைகளின் கல்வியையாவது வளர்த்துக் கொள்ள லாம் என்ற நோக்கில் வாழ்கின்றனர்.

பெரும்பாலான வடமாகாண மீள்குடி யேற்றப் பிரதேசங்களில் போதிய வைத் தியசாலைகள. இல்லை. அவ்வைத்திய சாலைகளில் வைத்தியர்களோ, தாதி யர்களோ இல்லை. அத்தோடு தாய் சேய் மருத்துவம் இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

ஒரு தாய் குழந்தைப் பேற்றுக்காக குறிப் பிட்ட பிரதேசங்களிலுள்ள அரசாங்க கிராமிய மருத்துவ மனையில் அனுமதிக் கப்பட்டால், அத்தாயை பிரதான வைத் தியசாலைக்கு அழைத்துச் செல்வதற் கான போக்குவரத்து வசதிகள் இல்லை.

இக்காரணிகளும் பெரும்பாலானவர் களின் மீள்குடியேற்றத்தைத் தடுக்கின்ற முக்கிய நிகழ்வுகளாக காணப்படுகின்றன.

பெரும்பாலான மீள்குடியேற்றப் பிரதேசங்களிலுள்ள அரச நிர்வாகம் இவர்களின் மீள்குடியேற்றத்தில் மந்தமாக செயற்படுவதாக தெரிவிக்கின் றனர். உதாரணமாக - மீள்குடியேறச் செல்பவர்களுக்கு முதலில் ஒரு தற்காலிக குடியிருப்பு வசதி, 25 ஆயிரம் பெறுமதியான வீட்டு உபகர ணங்கள், குடிநீருக்கான வசதி என்ப வற்றை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது குறித்த பிரதேச செயலகத்தின் கடமையாகும்.

ஆனால், மீள்குடியேற்றப் பிரதேசங் களிலுள்ள பிரதேச செயலகங்கள் இச்சேவையை வழங்குவதில் பின்னிற் பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வுதவியை அரச சார்பற்ற நிறு வனங்கள் செய்வதாக இருந்தாலும் அதற்கும் ஜனாதிபதி செயலகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்கின்றனர்.

இவ்வாறான நிர்வாக செயற்பாடும் இவர்களின் மீள்குடியேற்றத்தைக் குறைக்கின்றன.

சுமார் 20 வருடங்களாக யுத்தத்தின் காரணமாக சொந்த இடங்களில் மீள்குடி யேற முடியாமல் தவித்த வடமாகாண முஸ்லிம்கள், தற்போது யுத்தம் நிறைவு பெற்றுள்ள இந்நேரத்திலும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறி சுதந்திரமாக வாழ்வதற்கு வழியின்றி தவிக்கின்றனர்.


அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு காணி, தொழில், சுகாதாரம், கல்வி, நிர்வாகம் என பல்வேறு பிரச்சினைகள் தடையாக இருக்கின்றன. இவை- களை அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், முஸ்லிம் சமூக நிறுவனங்கள் தீர்த்துத் தருமா?

அல்லது அவர்களை தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், மீள்குடியேற்றக் கிராமங்களிலும் வாழ வைக்கப் போகிறார்களா? என்ற ஏக்கத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு அவர்களின் அரசி யல் பிரதிநிதிகளின் பங்கு என்ன? என அவர்களே கேள்வி எழுப்புகின்றனர்.

25 ஆவது வருடமும் இவர்கள் அழு வதே விதியென்றால், எம் தேசத்தின தும், எம் சமூகத்தினதும், எம் அரசியல் வாதிகளினதும் பொறுப்புத்தான் என்ன? என்று இம்மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இணைவோம், அவர்களின் கண்ணீரைத் துடைப்போம், அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்.

# சீனாவின் நீர்மூழ்கிகள் மீண்டும் கொழும்பில்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்துக்கு சீனாவின் நீர்மூழ்கி, யுத்தக் கப்பல்கள் கடந்த வெள்ளிக்கிழமை வந்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா கடந்த வாரம் வெளியிட்ட கரிசனைகளையும் மீறி சீனாவின் கடற்கலங்கள் மீண்டும் இலங்கை வந்துள்ளமை இராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

சீனாவின் நீர்மூழ்கி, யுத்த கப்பல்கள் வரும் ஆறாம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் எனத் தெரிய வருகின்றது. சீன நீர்மூழ்கி இந்த வருடத்தில் மாத்திரம் 3 தடவைகள் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு ஆதரவு கிடையாது தடம் மாறுகிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப்பட மாட்டாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால் ஆதரவளிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளது.

பொது வேட்பாளராக ரணில் நிறுத்தப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவினை எதிர்பார்க்க முடியாது என இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.





ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப்பட மாட்டாது என மாதுளுவாவே சோபித தேரரும் தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாகவே இந்த விடயத்தை அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி வேறு ஓர் வேட்பாளரை நிறுத்தினால் ஆதரவளிக்கத் தயார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியில் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது. யாரை பொதுவேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொது வேட்பாளர் தாமே என ரணில் விக்ரமசிங்க பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ரணிலுக்கு ஆதரவளிக்கப்படும் என சஜித் பிரேமதாசவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# சாட்சியங்கள் வழங்க இன்னமும் வாய்ப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவிற்கு சாட்சியமளிக்கும் கால அவகாசம் முடிவடைந்த போதிலும், இன்னமும் சாட்சியங்களை அளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய கால வரையறையின் பின்னரான சாட்சியங்களையும் ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 30ம் திகதியுடன சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளும கால வரையறை பூர்த்தியாகின்றது. சாட்சியமளிப்பதற்கான கால வரையறை உத்தியோகபூர்வமாக மீள நீடிக்கப்பட மாட்டாது என அறிவித்துள்ளது.

எனினும், சாட்சியங்கள் அளிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள வழிவகைகள் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சில வகையிலான சாட்சியங்கள் கிடைக்கப் பெற கால அவகாசம் தேவை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பேச்சாளர் ரொபர்ட் கொல்வில்லி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் மற்றும யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான பல்வேறு சாட்சியங்கள் திரட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# காலணிகளின் கண்காட்சி

காலணி மற்றும் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி 2015 பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை காலணி மற்றும் கைவினைப் பொருள் உற்பத்திகளை சர்வதேச ரீதியில் அறிமுகம் செய்தல் ஏற்றுமதி வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் திறமையான உற்பத்தியாளர்களை அடையாளங்காணல் போன்ற நோக்கங்களுக்காக இக்கண்காட்சி ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. இக்கண்காட்சி தொடர்பான மேலதிக தகவல்களை www.srilanka business. com என்ற இணையதளமூடாக அல்லது 0113 135 741∴ 0112 300 727 தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

அல்லது பணிப்பாளர்- கைத்தொழில் உற்பத்தி பிரிவு- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை- இல 42- நவம் மாவத்தை - கொழும்பு 2 என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

## வீதிவிபத்தில் சிக்கி 14 கடற்படையினர் காயம்

(கொழும்பு)

கடற்படைக்கு சொந்தமான பஸ், ஹொரவெல மீகஹத்தென்ன பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதில் 14 கடற்படைவர்ர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வினைத்திறன் மிக்க பொலிஸ் சேவை புதிய பிரமாணத்திட்டம் விரைவில்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

வினைத்திறன் மிக்க பொலிஸ் சேவையை நாடுமுழுவதும் ஏற்படுத்துவதற்கு புதிய பிரமாணத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட விருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டின் அமைதி மற்றும் சட்டத்தை பாதுகாக்கும் பொலிஸாரை மட்டம் தட்டுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

பொலிஸார் மக்களுக்காக பாரிய சேவையாற்றுவதாக




ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உறுப்பினர் களை அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்தபோது, ஜனாதிபதி இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் சேவையின் முகாமைத்துவத்தினை கட்டியெழுப்புவதற்கு, புதிதாக யாப்பு ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் பதவியுயர்வு, சம்பள அதிகரிப்பு, மேலதிக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும், தற்போது காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்

# இடைவிடாமல் தொடரும் மீட்புப்பணி ஏக்கத்துடன் காத்திருக்கும் உறவுகள்



(கொழும்பு)

கொஸ்லந்தை - மீறியபெத்த தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவினால் காணாமற்போனோரைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினமும் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இதன்படி இதுவரை சம்பவத்தில பலியானவர்களில் ஐந்து சடலங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட சில பொருட்களும் இதன்போது தேடுதலில் ஈடுபட்டுள்ளவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் மண்சரிவு ஏற்பட்ட மீறியபெத்த தோட்டத்திற்கு அருகிலுள்ள எஸ்.கே.தோட்டம் மற்றும் அம்பிடியதென்ன ஆகிய பகுதிகளில் இருந்த 121 குடும்பங்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மண்சரிவு ஏற்படும் ஆபத்து இருப்பதே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத்துறைமுகத்தில் இரகசிய கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்டது ஏன்?

## தலையைக் குடையும் சுங்கப்பிரிவினர்

(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் பெயரில் இயங்கும் நிறுவனத்துக்கு வந்த இரண்டு கொள்கலன்கள் சோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்டமை தொடர்பில் சந்தேகம் வெளியிடபபட்டுள்ளது.

இந்த கொள்கலனில் ஒன்று மோட்டார் உதிரிபாகங்கள் அடங்கியது என்று கூறப்பட்டது. எனினும் இரண்டு கொள்கலன்களும் பயன்படுத்திய சைக்கிள்கள் என்ற அடிப்படையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த கொள்கலன்கள் இரண்டும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் பெயரில் இயங்கும் நிறுவனத்தின் பெயருக்கே அனுப்பப்பட்டிருந்தன என்று துறைமுக சுங்க தரப்பு தெரிவித் துள்ளது.

இரண்டு கொள்கலன்களும் கடந்த செவ்வாய்கிழமையன்று



கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன. எனினும் குறிப்பிட்டப்படி இரண்டும் பயன்படுத்திய சைக்கிள்கள் அடங்கிய கொள்கலன்கள் இல்லை என்று சுங்கத்தரப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

ஏனெனில் குறிப்பிட்டப்படி 200 சைக்கிள்கள் என்றால் அவற்றுக்கு இரண்டு கொள்கலன்கள் அவசியமில்லை என்பதே சுங்கத்தரப்பின் வாதமாக உள்ளது.

# மீண்டும் வன்செயல்; அளுத்கமவில் பதட்டம்

## இப்போது நிலமை வழமைக்கு

(கொழும்பு)

அளுத்கம பகுதியில் நேற்று முன்தினம் மாலை மீண்டும் பதட்டமான சூழ்நிலையொன்று உருவாகியது.

தர்ஹா நகர் பகுதியை சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் சிலர் தாக்கப்பட்டதை தொடர்ந்தே இந்த பதட்ட நிலை உருவாகியது.

இதனை தொடர்ந்து உயர் இராணுவ அதிகாரி ஒருவர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதேவேளை சிறிய சம்பவமொன்று காரணமாக உருவான பதட்ட நிலை பின்னர் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

5 முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியன.

# வீதிகளில் திரியும் மாணவர்களை கவனிப்பின்றி விடுகின்றனர் பெற்றோர்

## சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிப்பு

(யாழ்நிருபர்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர் சிலர் பரீட்சை நடைபெற இன்னும் ஒரு மாதகாலமே இருக்கின்ற நிலையில் பாடசாலைகளுக்குச் செல்லாது வீதிகளிலும், பொது இடங்களிலும் சுற்றித்திரிவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலான பாடசாலைகள் தமது பாடசாலையின் சித்தி வீதத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக காலையிலும், மாலையிலும் மேலதிக வகுப்புக்கள், கருத்தரங்குகள், மாதிரிப் பரீட்சைகள் போன்றவற்றை நடாத்தி வருகின்றன. சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் ஓய்வின்றி இந்நடவடிக்கைகள் தொடர்கின்றன. கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்வி அதிகாரிகளும் அடிக்கடி பாடசாலைகளுக்கு விஜயம் செய்து க.பொ.த. சாதாரண மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை அவதானித்து வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

அடைவு மட்டத்தை உயர்த்த வேண்டும். எல்லா மாணவர்களையும் சித்திபெற வைக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாகச் செயற்படும் ஆசிரியர்களோ, அதிபர்களோ அல்லது கல்வித் திணைக்கள அதிகாரிகளோ பாடசாலைக்கு வராத மாணவர்கள் மீது கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. பெற்றோர்கள் இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்படவேண்டும். தமது பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்குச் செல்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரின் செயல் பாராட்டுக்குரியது. அணமையில் கோண்டாவிலில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றுக்குச் சென்ற அவர் அங்கு மாணவர் வரவு ஒழுங்கீனத்தை அவதானித்து பெற்றோர் அனைவரையும் அழைத்து அவர்களை தினமும் பிள்ளைகளுடன வருகை தந்து அவர்களின் கற்றல் செயற்பாடுகளை வகுப்பறையில் தங்கியிருந்து அவதானிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பெற்றோரும் பாடசாலைக்கு வருகை தருவதாகவும் மாணவர் வரவு திருப்திகரமாக இருப்பதாகவும், கற்றல் செயற்பாடுகள் இடையூறின்றி நடைபெறுவதாகவும் ஏனைய மாணவர்களும் ஆசிரியர்களும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

யாழ்.கல்வி வலயத்தைவிட தென்மராட்சி, தீவகம், வலிகாமம், வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலும் க.பொ.த.(சா/த) மாணவர்களின் வரவு ஒழுங்கீனமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலைச் சமூகம் மட்டுமன்றி கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலர், சிறுவர் நன்நடத்தை அதிகாரிகள், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரும் பாடசாலை செல்லாத மாணவர்களை உடனடியாக பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்று கற்றல் செயற பாடுகளில் ஈடுபட வைப்பதன் மூலமே எமது பிரதேச பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த முடியும். (10)

# ‘அலுவலக முகாமைத்துவம்’ நூல் வெளியிடப்பட்டது



(வவுனியா)

ஆர்.சி.அமல்ராஜ் (SLAS) எழுதிய “அலுவலக முகாமைத்துவமும் அலுவலக முறைமைகளும்” என்ற நூல் நேற்றுமுன்தினம் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை சங்கத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

வவுனியா மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.பாலகுமரனுக்கு முதற்பிரதி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தி.இராசநாயகம் (முன்னாள் அரசாங்க அதிபர் கிளிநொச்சி மாவட்டம்) ஏ.ஓ.எம்.நபீல் (பிரதி தேர்தல் ஆணையாளர் வடக்கு) ஏ.எம்.எம்.முஷ்சீன் (முன்னாள் செட்டிகுள பிரதேச செயலாளர்) ஆகியோர் சிறப்பு பிரதிகளை பெற்றனர்.

கவிஞர் எஸ்.நாகராசா தொகுத்து வழங்கிய இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் பல திணைக்களங்களைச் சார்ந்த [illegible]ரச அலுவலர்கள் கலந்துகொண்டதுடன் பிரதிகளையும் பெ[illegible]ச் சென்றனர். ([illegible]0)

# முதியோர்களுக்கு உணவுப்பொருட்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி எஸ்.கே.முதியோர் இல்லத்தின் அனுசரணையில் மிக அண்மையில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மலையாளபுரம் கிராமத்து முதியோர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் மெ.சந்திரபாலன், பாரதிபுரம் வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் க.இராஜேந்திரம் ஆகியோரின் பங்கேற்புடன் இவ் உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மிக வறிய நிலையிலுள்ள முதியோர்கள் இவ் உதவித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே அம்பாள நகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள சாந்தபுரம் கிராமத்தில் உலர் உணவுப் பொருள்களைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

எஸ்.கே.முதியோர் இல்லம் இது போன்ற பல செயற்பாடுகளை முதியோர் தொடர்பில் கிளிநொச்சியில் செய்து வருகின்றது.

அறிவியல் நகரில் அமைந்துள்ள எஸ்.கே.முதியோர் இல்லம் மூலமாக ஆதரவற்ற முதியோர்கள் பலர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். (90)

# பரமர் சங்கமம்



“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்” எண்டதெல்லாம் மலையேறிப் போச்சு இப்பெல்லாம் ‘கூகுள் கைப் பழக்கம், கூர்ந்து நெற்பார்த்தல் கண்பழக்கம்’ எண்டுதான் சொல்ல வேணும். உந்த மலையேறிப் போச்சு எண்டது காலாவதி ஆகி விட்டதைக் குறிக்கும்.

சமீபத்தில் பரமரின் கதைப்புத்தகமொண்டு ஒரு பரோபகாரியின் தயவால் வெளிவந்துள்ளது. அதனை வித்துப் முடிச்சாத் தானே வெற்றி அந்த வெற்றி ரெண்டு வகையில் பாக்கலாம் ஒண்டுவிட்ட முதலைத் திரும்பிப் புடிப்பது மற்றது ஒரு படைப்பாளியின் நோக்கம் செயலுருப் பெறுவது. அதாவது மக்களிடம் கற்றதை மக்களிடம் திரும்ப வழங்குவது.

அதனால் மக்களின் வாழ்வியலை பட்டந்தீட்டுவதன் மூலம் சமூக விழுமியங்களைக் கட்டிக் காத்துப் பேணுவது. இந்த நல்நோக்கத்தைச் செயல்படுத்திறேண்டால் கல்லில் நாருரிக்கிற பாடுதான் படவேணும். புத்தகத்தைக் கொண்டு யாழ்.நகரக் கடைகடையா ஏறி இறங்கியதில் கற்றுக்கொண்டது அதிகம்.

புத்தகத்தைக் குடுத்து ஆதரவுக் கரம் நீட்டுங்கள் எண்டால் ஆரிப்ப இதுகளையெல்லாம் படிக்கிறே தொலைக் காட்சிப் பெட்டியெல்லோ சிறிசில் இருந்து பெரிசு ஈறாகப் பார்த்துக் கொண்டிருக்கேக்கை இதை வாங்கிப் பிரயோ சனமில்லை எண்டவையும்..

வந்திட்டாங்கள் அடுத்த பிச்சைக்காரரெண்டு முகம் சுழிப்போரும், புத்தகத்தை முதலில் இருந்து அடிவரை பத்துப் பதினைந்து நிமிடங்களாகக் கீழும் மேலும் புரட்டிப் பாத்திட்டு வேண்டாமெண்ணுறவையும், இதுக்கிடேல்லை பெரியவங்கள் நீங்கள் கொண்டந்திட்டீங்கள் வாங்கேலாமல் விடேலுமே எண்டு மதிச்சு நடக்கிறவையளையும் தரிசித்தம்

இதனிடையே வாசிப்புப் பழக்கம் அருகிப் போகுதெண்டு கூப்பாடு போட்டுக் கொண்டு புள்ளைகளைப் பெரிய பெரிய பாடசாலைகளில் சேர்க்க கட்டுக் கட்டாகப் பணத்தைக் கொண்டு படிகளில் ஏறி இறங்கியவையளையும் இந்த மண் பாத்துக்கொண்டிருக்கு முகநூலிலோ, மின்னஞ்சலிலோ ஏன் தொலைக்காட்சியைப் பார்க்க வேணும் அடிப்படை வாசிப்பு அறிவிருக்க வேணுமெண்டதை மறந்து சிலர் புத்தகங்களை விக்கக் கொண்டு போனா எடுத்தெறிஞ்சு கதைக்கிறதுகளைப் பரவலாக அனுபவிக்க முடிஞ்சுது.

எண்டாலும் எங்கடை யாழ்ப்பாண வர்த்தகப் பெருமக்களை நம்பித்தான் நூல்களை வெளியிட முன்வாறதும் அதுக்கு அவர்களும் கைகொடுத்து வாறதாலை இன்னும் நூறாண்டுகளுக்கு நம்பி இலக்கியக் காரர்களும் வாழலாம். அதேவேளை சில புத்தகப் பூச்சிகள் அந்நிய இலக்கிய நுகர்வுடன் எங்கடைஇலக்கியங்களை ஒப்பிட்டுப் பாத்திட்டுக் கதைக்கிறதுகளையும் கேக்கிறம்.

பாக்கப்போனால் வாசிப்பும் முகநூல், மின்னஞ்சல் பழக்கமாக எதிர்காலங்களில் வந்து விட்டால் ஆச்சரியப்படுவதுக்கு ஒண்டுமில்லை இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்..

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(கைதடி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் அண்மையில் நடைபெற்றுள்ளன.

முன்பள்ளி மாணவர்களுக்கிடையே அபிநய நடனம், பேச்சுப் போட்டி, கதை சொல்லுதல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

மேலும், பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரை பொது அறிவு போட்டிகளும் நடை பெற்றுள்ளன.

இவை மாணவர்களின் வகுப்பு ரீதியில் பிரிவு 1, 2 , 3 என்ற அடிப்படையில் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மிக விரைவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (90)

# முரசின் இன்றைய பலன்



(03.10.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி.
மரணயோகம் / ஏகாதசி.
பூரட்டாதி நட்சத்திரம் முன்னிரவு 07.46 வரை. பின் உத்தரட்டாதி.
இராகு காலம 07.34 - 09.04 வரை. சுபநேரம 12.04 - 01.34 வரை.


ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பரீட்சை முடிவு நன்றாக இருந்ததினால் பதவி உயர்வு கிடைக்கும் நம்பிக்கை பிறத்தல், வெளியூர் பயணம் பற்றிய தித்திப்பான செய்தி வந்தடைதல். |
| ரிஷபம் | பொறுப்பின்றி நம்பிக்கை அடிப்படையில் கொடுத்த கடனை மீளப்பெறத்திண்டாடுதல், சத்துரு சங்கார சனி இருப்பதினால் எதிரியின் தொல்லை நீங்குதல். |
| மிதுனம் | குழந்தைப் பிரசவத்திற்காக சீசரைமேற்கொள்ள அதிர்ஷ்ட நாட்குறித்தல், எதிர்பாராத சுபகாரியமொன்று மனையில் ஏற்படல். |
| கடகம் | வாகனத்தின் உரிமம் சம்பந்தமாக பிரச்சினை காணப்படுவதினால் கைவிடுதல், சந்தேகக்கோடு அறவே அற்றுவிட்டதால் திருமணம் செய்ய பச்சைக் கொடி காட்டுதல். |
| சிம்மம் | கொடுத்ததை வசூலிக்க இயலாத நிலையில் முறையிட எண்ணமிடல், அநாவசியதலையீட்டினால் மானபங் கம் ஏற்படும் நிலை வருதல். |
| கன்னி | தொழில் மற்றும் வெளியூர் பயண நிமித்தம் பிரிவுத்துயர் வாட்டுதல், குழந்தைப்பேறு கிட்டிவிட்ட அறிகுறி தென்பட்டதால் மகிழ்வு. |
| துலாம் | சொத்துப்பங்கீடு சுமுகநிலை இன்மையால் சகோதரர் மத்தியில் முரண்பாடு தக்க வைப்பு, நோய் குணமடைய தெய்வதலம் நோக்கிப் பயணம் ஏற்படல். |
| விருச்சிகம் | உதவப்போய் உபத்திரவத்தில் சிக்க நேரிட்டதுடன் கௌரவக் குறைவும் தோன்றுதல், சர்ப்பக்கிரகங்கள் கோசரரீதியில் நன்மையைத் தக்க வைத்தல். |
| தனுசு | எய்தவன் இருக்க அம்பை நோவது போல் விளக்கமின்மையால் களேபரம் ஏற்படல், ஒழுக்கத்தைக்கடைப்பிடித்ததால் நாடிவந்த துயர் அற்றுப்போதல். |
| மகரம் | சகோதரனுடன் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு நன்மைக்காரியத்திற்கு சமூகமளிக்கச்சென்றதால் நீங்கிவிடல், வியாழசுகம் இருப்பதினால் புதிய மனைகோலத்திட்டமிடல். |
| கும்பம் | பரீட்சை நெருங்குவதினால் கல்விப்புலத்தில் மனதைச் செலுத்தல், பிதாவுடன் ஏற்பட்டிருந்த முரண்பாடு நீங்கி சுமுக நிலை வருதல். |
| மீனம் | தற்காலிக நியமனம் நிரந்தரமாக்கும் கைங்கரியமேற்படல், வெளியூர் பயணத்தில் கால்பதிக்க தயக்கம். |

# முரளி நல்லிணக்க ருவென்ரி-20

# கொழும்பு ஆனந்தா கல்லூரி, சினிகம சம்பியன்



பட உதவி : நிருஜன்

(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 வெற்றிக் கிண்ணத்தை கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மற்றும் சினிகமா பெண்கள் அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

பெண்களுக்கான இறுதிப் பொட்டியில் சினிகம பெண்கள் அணியும் பதுளை பெண்கள் அணியும் மோதின. பெண்களுக்கான இறுதிப் போட்டி 15 ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சினிகம பெண்கள் அணி 15 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லங்கா சர்சினி ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சஜினி உத்தார மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பதுளை பெண்கள் அணி 14.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மடுவந்தி 10 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைத்து வீராங்கனைகளும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் டசுனி, டெசந்திய ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் முரளி நல்லிணக்க கிண்ணத்தை சீனிகம பெண்கள் அணி கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகியாக லங்க தர்சினி தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியும் கொழும்பு றிஸ்மன் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய றிஸ்மன் கல்லூரி அணி சகான் ஆராய்ச்சி, கவிங்க அஞ்சல ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கொழும்பு றிஸ்மன் கல்லூரி அணி 18.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பசுரு விக்கிரம 19 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்துவீச்சில் சகான் ஆராய்ச்சி நான்கு, கவிங்க அஞ்சல மூன்று, ஏ. கிசேரா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி முதலிரு விக்கெட்டுக்களையும் ஓட்டங்கள் எதுவும் பெறாத நிலையில் பறிகொடுத்தது. தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டையும் நான்கு ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் களமிறங்கிய அகல சிகேரா பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இறுதியில் ஆனந்தாக் கல்லூரி அணி 16.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அகல சிகேரா 50 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காது 39, அஞ்சல 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அசரங்க மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சகான் ஆராய்ச்சி, தொடர் நாயகனாக சமு அசான், சிறந்த துடுப்பாட்ட வீரராக லங்கா, சிறந்த பந்து வீச்சாளராக சுபேர ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வின் இடைவேளையின் போது இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சி இடம்பெற்றது.

அத்துடன் முல்லைத்தீவு முத்தையன்கட்டு அன்பு இல்ல சிறார்களும் இப்போட்டியைக் கண்டு களித்தனர்.

கடந்த 29ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்ட இணைந்த அணி மற்றும் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட இணைந்த அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா, இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கண ஹேரத், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஜெறோம் செல்வநாயகம் மற்றும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டுத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டுகளித்தனர்.

(எஸ்.பி.)

## விரைவான சதம்; மிஸ்பா சாதனை

(அபுதாபி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில், 56 பந்தில் சதம் அடித்த பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா, புதிய சாதனை படைத்தார்.

பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி அபுதாபியில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸில் பாகிஸ்தான் 570/6 (ஆட்டத்தை நிறுத்தியது), அவுஸ்ரேலியா 261 ஓட்டங்களைப் பெற்றது. மூன்றாம் நாள் முடிவில், 2ஆவது இனிங்ஸில் பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்கு 61 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்த யுனிஸ்கான் (46) அரைச்சத வாய்ப்பை இழந்தார். அடுத்து வந்த கப்டன் மிஸ்பா, 21 பந்தில் அரைச்சதம் அடித்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை பிடித்தார். முன்னதாக 2005இல் கேப்டவுனில் நடந்த சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்டில் தென்னாபிரிக்காவின் கலிஸ் 24 பந்தில் அரைச்சதம் அடித்தது சாதனையாக இருந்தது.

தொடர்ந்து அசத்திய மிஸ்பா, 56 பந்தில் சதத்தை பதிவு செய்தார். இதன்மூலம் டெஸ்ட் வரலாற்றில், குறைந்த பந்தில் சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை, முன்னாள் மே.தீவுகளின் வீரர் விவியன் ரிச்சர்ட்சுடன் (எதிர்-இங்கிலாந்து, 1986, இடம்-செயின்ட் ஜோன்ஸ்) பகிர்ந்து கொண்டார். மறுமுனையில் பொறுப்பாக ஆடிய அசார் அலி, தன்பங்கிற்கு சதம் அடித்தார். இரண்டாவது இனிங்ஸில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது. 603 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடும் அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## ஆசியாவிற்கு பெருமை சேர்த்த ஜப்பான் வீரர்



(பாரிஸ்)

பாரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் வென்றதன் மூலம் உலக ரென்னிஸ் இறுதிச் சுற்றுக்கு ஜப்பானின் நிஷிகோரி தகுதி பெற்றுள்ளார். உலக ரென்னிஸ் போட்டி வரலாற்றில் இச்சுற்றுப் போட்டிக்கு முன்னேறும் முதல் ஆசிய வீரர் என்ற பெருமையை நிஷிகோரி தன்வசமாக்கிக் கொண்டார்.

பாரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டி பிரான்ஸில் நடைபெற்று வருகிறது.

ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் 7ஆம் நிலை வீரரான ஜப்பானின் நிஷிகோரி 3-6, 7-6 (5), 6-என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் டேவிட் பெரரை சாய்த்து அசத்தினார். இதன் மூலம் வருகிற 9ஆம் திகதி லண்டனில் ஆரம்பமாகவுள்ள முதல் நிலை8 வீரர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் ஏ.டி.பி. உலக ரென்னிஸ் இறுதிச் சுற்றுக்கும் 24 வயதான நிஷிகோரி தகுதி பெற்றார். 44 ஆண்டு கால ஏ.டி.பி. உலக ரென்னிஸ் போட்டி வரலாற்றில் ஆசிய வீரர் ஒருவர் ஒற்றையர் பிரிவில் தகுதி அடைந்திருப்பது, இதுவே முதல் தடவையாகும்.

ஏ.டி.பி. உலக ரென்னிஸ் இறுதிச் சுற்றில் களம் இறங்கும் 8 வீரர்களும் தற்போது உறுதியாகி விட்டது. இதன்படி நடப்பு சம்பியன் ஜோகோவிச் (சேர்பியா), ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), மரின் சிலிச் (சிலி), ஆன்டி முர்ரே (இங்கிலாந்து), தோமஸ் பெர்டிச் (செக்குடியரசு), மிலோஸ் ராவ்னிக் (கனடா), நிஷிகோரி (ஜப்பான்) ஆகியோர் உலக போட்டியில் மல்லுக்கட்ட காத்திருக்கிறார்கள். இந்தப் போட்டிக்கு தகுதி பெற்ற முதல் கனடா வீரர் (ஒற்றையரில்) என்ற மகிமை ராவ்னிக்குக்கும் கிடைத்திருக்கிறது. நடால் காயம் காரணமாக விலகியுள்ளமை குறிப்பிடத்கதக்து.

# கீர்த்தனன் நினைவு கூடைப்பந்தாட்டம் யாழ். இந்து, இராமநாதன் சம்பியன்



(கொக்குவில்)

கீர்த்தனன் நினைவுக் கிண்ண கூடைப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கீர்த்தனன் நினைவுக் கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டிகள் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. முதலிரு பாதி ஆட்டங்களிலும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மாறி மாறி புள்ளிகளைக் குவித்தவண்ணமிருந்தன. இந்நிலையில் பிற்பாதி இரு ஆட்டங்களிலும் எழுச்சி பெற்ற இராமநாதன் கல்லூரி அணி வேகமாகப் புள்ளிகளைச் சேர்த்தது. நிறைவில் இராமநாதன் கல்லூரி அணி 43-33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அத்துடன் யாழ். மத்திய கல்லூரியினால் நடாத்தப்பட்ட விபுலானந்தன் நினைவுக் கிண்ணக் கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பழிதீர்த்துக் கொண்டது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மூர்க்கத்துடன் செயற்பட்டு புள்ளிகளைப் பெற்றது. இருப்பினும் பின்னர் வேகமாகச் செயற்பட்ட யாழ். இந்துக் கல்லூரி அணி மிக-வேகமாகப் புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தது. நிறைவில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 52-40 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## இன்றைய ஆட்டம்

(தெல்லிப்பளை)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் இன்றைய தினம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இரு அணிகளுமே பயிற்சிப் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பதால் இப்போட்டி மிகுந்த பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

## மீண்டு வருவேன்

நியூசிலாந்து அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் என்ற நம்பிக்கை இருக்கின்றது. நியூசிலாந்து ஏ அணிக்கு என்னைத் தெரிவு செய்திருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இதன் மூலம் எனக்கான நல்ல வாய்ப்புக்கள் திறக்கப்பட்டிருப்பதாக உணர்கின்றேன். கடந்த காலங்களில் நான் செய்த பல தவறுகளால் அணியிலிருந்து நீக்கப்பட்டேன். இவற்றிலிருந்து தற்போது மீண்டுள்ளேன். அத்துடன் அடுத்து நடைபெறவுள்ள 11 ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து அணி சார்பாக களமிறங்குவதே எனது இலக்காக உள்ளது என நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் ரைடர் தெரிவித்துள்ளார்.

## நஷ்டஈடு கோரல்

மேற்கிந்தியத்தீவு அணி ஊதிய ஒப்பந்த பிரச்சினை காரணமாக இந்திய சுற்றுப்பயணத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு நாடு திரும்பியதை அடுத்து, அந்நாட்டு கிரிக்கெட் சபை ரூ.250 கோடி நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) கடிதம் அனுப்பியுள்ளது. இது தொடர்பாக பி.சி.சி.ஐ. செயலர் சஞ்சய் பட்டேல் கூறுகையில், மே.தீவுகள் அணி தொடரில் இருந்து விலகி பாதியிலேயே வெளியேறியதால் எங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, ரூ.250 கோடி நஷ்டஈடு கேட்டு கடிதம் அனுப்பியுள்ளோம். இதற்கு 15 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மே.தீவுகள் அணியுடனான இரு தரப்பு கிரிக்கெட் தொடர்களை பி.சி.சி.ஐ. ஏற்கனவே இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறுதியில் யாழ். 4 ஸ்ரார், தொண்டமானாறு ஒற்றுமை

(வடமராட்சி)

கம்பர்மலை கம்பன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். 4 ஸ்ரார் மற்றும் தொண்டமானாறு ஒன்றுமை அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கம்பர்மலை கம்பன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் கம்பன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. காலிறுதி வரையான ஆட்டங்கள் ஐந்து ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றன. அரையிறுதிப் போட்டிகள் எட்டு ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றன.

இதற்கமைய முதலாவது அரையிறுதிப் போட்டியில் கொம்மந்தறை யூத் அணியும் யாழ். 4 ஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கொம்மந்தறை யூத் அணி 7.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் மூன்று சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜேம்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 59 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். 4 ஸ்ரார் அணி 6.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜேம்ஸ் 13, ரைபு 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவ் வெற்றியின் மூலம் யாழ். 4 ஸ்ரார் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் பிரம்படி அணியும் தொண்டமானாறு ஒற்றுமை அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் பிரம்படி அணி நிர்ணயிக்கப்பட்ட எட்டு ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பவி 10, சிலோஜன் 6, கீரன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுரேன் இரண்டு, ஈசன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தொண்டமானாறு ஒற்றுமை அணி 7 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஈசன் 16, கண்ணன் 6 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிலோஜன், பவி ஆகி-யோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் தொண்டமானாறு ஒற்றுமை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.






வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் செயலாளருக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற்றது. இதில் கால்பந்துப் போட்டிகள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள போட்டிகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. இதில் பங்குகொண்டோரைக் காணலாம்.

# நாட்டின் நலனில் இருந்து ஒரு தேசியத் தேர்தலை பயனுள்ளதாக்குவதை நோக்கி..!



சரியான ஒரு அரசியலுக்காக மக்களை அரசியல் விழிப்பூட்டுவதற்குப் பதில் தேவையற்றதை பூதாகரமாக்கி அரசியல் நடாத்தும் சூழலொன்று நமது நாட்டில் இப்போது விரிவாக்கம் பெற்றிருக்கிறது.

புலித்தடை நீக்கத்தை தத்தமது நலன்களிலிருந்து அதனை அரசியலாக்க மேற்கொண்ட முயற்சிகள் இறுதியில் இருதரப்பும் புலிகளை அழிப்பதில் தாமே வீரர்கள் என்பதை வெளிப்படுத்தியதில் முடிந்திருக்கிறதே தவிர அந்த விடயம் மக்கள் மத்தியில் அவ்வளவுக்கு அக்கறை கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலை நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக்கிக் கொள்ள இதில் பங்கு கொள்ளும் அரசியல் கட்சிகள் இரண்டு விடயங்களில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும்.

ஒன்று, நிறைவேற்றதிகாரம் தேசத்துக்கான அரசியலில் ஏற்படுத்தியுள்ள பிரதிகூலமான விளைவுகளை தெளிவாக மக்கள் முன் கொண்டு செல்வது.

மற்றையது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் தென்னிலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள தேவையற்ற சந்தேகங்களை அகற்றுவதற்கான அணுகுமுறையொன்றை இந்த தேர்தலுக்காக கண்டுகொள்வது.

இதன் அடிப்படையில் ஆளும்தரப்பாயினும் சரி எதிர்த்தரப்பாயினும் சரி தேசத்தின் நலனில் இருந்து இந்த தேர்தலுக்காக ஏற்படுத்தப்போகும் புதிய கூட்டு தனது தேர்தல் வெற்றிக்காக என்னென்ன விடயங்களை முன்னிலைப் படுத்துகிறது என்பதில் இருந்தே இந்த தேர்தலின் வெற்றியை தேசத்தின் நலனுக்கான வெற்றியாக அடையாளப் படுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் தேர்தலுக்கான இந்த கூட்டு முன்னணி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் அதன் பொது வேலைத்திட்டம் என்னவாக இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கைவிட்டு வெற்றிபெறக்கூடிய நபர் யார் என்பதை தேடிக்கண்டு கொள்வதிலேயே கட்சிகள் பலவும் கவனம் செலுத்தி இருப்பது ஒரு துரதிஷ்டமான நிலைமையாகும்.

ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தேசத்தின் முன் கொண்டு செல்லப்பட வேண்டிய அரசியலை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இணைந்து வரையறுப்பதற்குப் பதில் ஏற்கனவே மக்கள் தீர்மானித்துவிட்டதாக கருதப்படும் ஒரு தலைவரை தேடியலையும் முயற்சியாக இது அமைந்து விடுகிறது.

கூடவே இந்தத் தேர்தலில் புலிகள் மீள் எழுச்சிபெறுவதாக கூறி அதனை தடுக்கக் கூடிய ஒரு நாட்டின் தலைவரை இனங்காண மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அவ்வாறான ஒரு புலிகளின் மீள்வருகை இடம்பெற்றால் அதனை நேரடியாகவும் மறைமுகமாகவும் மறுதலிப்பதில் முன்னெப்போதையும் விட தமிழ் சூழல் காத்திரமான பங்கை வகிக்கும் என்பதை இந்தத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் புலிகளால் சிங்கள மக்கள் எதிர்கொண்ட அவலங்களை விட போதிய பட்டறிவைத் தமிழ் மக்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்டு விட்டார்கள்.

தேர்தல் வெற்றிக்காக ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒரு கூட்டு முன்னணி பதவிக்கு வந்தபின் அந்த ஆட்சியின் விளைவாக மாற்றுத் தலைமையொன்றை சில கட்சிகள் தேடமுனையும் போது எதிர்கொள்ளும் அக நெருக்கடிகள் முன்னெப்போதையும் விட இந்தத் தேர்தலில்தான் உச்சம் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

எப்படியாவது ஒரு மாற்றத்தை கொண்டுவந்துவிட வேண்டும் என்பதில் ஏற்பட்டுள்ள வேட்கையானது, தேவையான சரியான அரசியல் கூட்டு எவ்வாறானதாக இருக்க முடியும் அதனை எவ்வாறு உருவாக்கலாம் என்பதிலிருந்து தவறி அதனை தமக்கு வெளியே தேடும் ஒரு நிலைமைதான் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இது தமக்கான சொந்த அரசியலை இந்தக் கட்சிகள் இழந்துவிட்டிருப்பதை சுட்டுவது மட்டுமன்றி ஏனைய கட்சிகளையும் அந்த நிலைமைக்கு நிர்ப்பந்திக்கின்ற ஒரு சூழல் உருவாகி இருப்பதையும் குறித்து நிற்கிறது.

இந்த உண்மை சம்பந்தப்பட்ட கட்சிகளால் உணரப்படுமாயின் அதுவே சரியான மாற்றத்துக்கான ஒரு ஆரம்பமாகவும் கூட அமையலாம்.

- சாலையூரான் -

# ஊடகங்களின் தமிழ்த் தேசிய அசிங்கம்

## - இணையக் கட்டுரையிலிருந்து.

லைக்கா மொபைல் நிறுவனத்தின் உரிமையாளரும். சிறீலங்கன் எயார்லைன்ஸ் இன் பிரதான முகவரான லைக்கா பிளை, லைக்கா புரடக்‌ஷன் ஆகியவற்றை நடத்திவருபவருமான சுபாஸ்கரன் அல்லிராஜா இலங்கை விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தமிழ் ஊடக மாபியாக்கள் கட்டுக்கதை ஒன்றை பரப்பினர்.

அதிர்வு இணையம், தீபம் தொலைக்காட்சி, தமிழ்வின் இணையம் ஆகியவற்றில் இப் பொய்ச் செய்தி பரப்பப்பட, சீமான் கும்பல் அதனை உள்வாங்கிப் பிரசாரத்தில் இறங்கியது. கைதான செய்தியை புதனன்று காலை முதல் மாலைவரை பரப்பிய இந்த ஊடகங்கள் இறுதியில் எதிர்பார்த்தபடி சுபாஸ்கரன் விடுதலையானார் என்ற செய்தியையும் வெளியிட்டன.

நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டு இச் செய்தி புலம்பெயர் நாடுகளிலும் தமிழகத்திலும் பரப்பப்பட்ட போதிலும் இறுதியில் மிகப்பெரும் "சொதப்பலில்" முடிவுற்றது.

"மாலைதீவிலிருந்து லண்டன் விமான நிலையத்தை நோக்கிப் பயணம் செய்த லண்டனைச் சேர்ந்த பணக்காரர்களில் ஒருவரான சுபாஸ்கரனின் விமானம் கொழும்பு விமான நிலையத்தில் தரித்து நின்றது. விமானத்தினுள் நுழைந்த இலங்கை அரச உளவுப்படை சுபாஸ்கரனையும் உதவியாளரையும் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றது."

திருட்டுச் செய்தியின் "சொதப்பல்" இதுதான்:

விமானம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்லும் போது இடையில் தரித்து நிற்கும் மூன்றாவது நாட்டின் இடைத்தங்கல் -Transit- பகுதி அந்த மூன்றாவது நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டதல்ல. அதாவது, மாலைதீவிலிருந்து பிரித்தானியா சென்ற விமானம் இலங்கையில் தரித்து நிற்கும் இடைத்தங்கல் பகுதி இலங்கை அரசின் சட்டத்திற்கு உட்பட்டதல்ல.

அங்கு சர்வதேசச் சட்டத்திற்கு புறம்பான விடயங்களான கடவுச்சீட்டு மாறாட்டம், போதைப்பொருட் கடத்தல், வெடிகுண்டுகளைப் பயன்படுத்தல் போன்ற விடயங்கள் மட்டுமே ஆராயப்படலாம்.

அதிலும் சுபாஸ்கரன் விமானத்தின் உள்ளே வைத்து கைது செய்யப்பட்டார் என்கிறது பொய்ச் செய்தி. லண்டன் மில்லியனரை விமானத்தினுள் வைத்துக் கைது செய்து தடுத்து வைத்தமைக்காக இலங்கை அரசிடம் பில்லியன் பவுண்ஸ்கள் நட்டஈடு கோரலாம். அதுமட்டுமன்றி சர்வதேசச் சட்டங்களுக்குள் இலங்கை அரச விமானச் சேவைத் துறையைச் சிக்கவைக்கலாம்.

பிரித்தானியாவில் ஆளும் கட்சியின் முதல்பத்து நிதி வழங்குனர்களில் ஒருவரும், ராஜபக்ச குடும்பத்தின் வியாபாரப் பங்காளியுமான சுபாஸ்கரனை இலங்கை அரசு கைது செய்தது என்று அப்பாவி மக்களின் காதில் பூச்சுற்றுகிறார்கள். விட்டால் மகிந்த ராஜபக்ச வெள்ளவத்தைப் போலிசாரால் கைது செய்யப்பட்டு அண்ராயரோடு அடைக்கப்பட்டுள்ளார் என்று நாளை செய்தி வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

ஊடக மாபியாக்கள் வெளியிட்ட செய்தியில்,

ஐரோப்பிய ஒன்றியம் புலிகளின் தடை நீக்கியது தொடர்பாக சுபாஸ்கரனிடம் இலங்கை அரசு கேள்வி எழுப்பியதாகக் கூறுகின்றன. Transit பகுதியில் தரித்து நின்ற விமானத்திற்குள் நுழைந்து ஒருவரை இலங்கை அரச விவாகரம் தொடர்பாகக் கேள்வியெழுப்ப முடியாது.

அப்பாவி மக்களை மந்தைகள் கூட்டம் என்று எண்ணிக்கொள்ளும்




இந்த ஊடக வியாபாரிகளின் அருவருக்கத்தக்க பணவெறி லைக்காவைப் புனிதப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

இந்த ஊடகங்களைப் பொறுத்தவரை செய்தி என்பது காசு, பணம், துட்டு, மணிமணி...! இலங்கை அரசாங்கத்துடன் வியாபாரம் செய்வதற்காகவும், பிரித்தானியாவில் வரிகட்டாமல் தப்பித்துக் கொள்ளவும் லைக்கா இலங்கையில் வீசும் எலும்புத்துண்டுகளை சேவை என்று செய்தியும் கட்டுரையும் வெளியிட்ட தமிழ்வின் போன்ற இணையத்தளங்கள் தமிழ் சமூகத்தின் சாபக்கேடு.

லைக்காவை முதலில் அம்பலப்படுத்தியது தமிழ் ஊடகங்கள் அல்ல. படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவின் ஊடகமான சண்டே லீடர். அப்போதெல்லாம் லைக்காவை யாரும் கண்டுகொண்டதில்லை. லசந்த படுகொலை செய்யப்பட்ட போது லைக்கா - இலங்கை அரசு இணைந்த Coyhd நூறு மில்லியன் டொலர்கள் வியாபாரம் ஒப்பந்த இலக்கங்களோடு சண்டேலீடர் வெளிக்கொண்டுவந் திருந்தது.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்த லைக்கா பிரதான நிதிவழங்குனராகச் செயற்பட்டு அதில் கலந்து கொண்ட போது தான் தமிழ் ஊடகப்பரப்பில் லைக்காவின் அரசியல் தலையீடு பேசப்பட்டது.

அண்மையில் லண்டனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொண்ட நிகழ்வும் லைக்காவின் பணத்திலேயே நடைபெற்றது.

லைக்கா தொடர்பான இவ்வளவு ஆதாரங்கள் வெளியான பின்பும் அந்த நிறுவனத்திற்கு ஆதரவு தெரிவித்தும் நன்றி தெரிவித்தும் அறிக்கைகள் வெளியிடும் சீமானிற்கு இவை யெல்லாம் வெறும் பிழைப்பு மட்டுமே. பிணங்களை வைத்துப் பிழைப்பு நடத்தும் அருவருப்பான அரசியல் நடத்தும் சீமான், எஸ்.ஆர்.எம். பச்சைமுத்து, லைக்கா சுபாஸ்கரன் ஆகியவர்களின் கூட்டாளி. இவர்களுக்குத் தேசிய முகமூடி அணிவித்து வியாபாரத்தை இணைந்து நடத்தும் சீமான் என்ற அரசியல் கோமாளியின் முகமூடி கிழிக்கப்பட வேண்டும்.


சுபாஸ்கரனும் டேவிட் கமரூனும்

சுபாஸ்கரன் கைது என்ற பொய்ச் செய்தி வெளியான தும் சீமானின் வால்கள் முகநூலில் விசிலடிக்க ஆரம்பித் துவிட்டன. ரஜனியை யும் விஜயையும் பார்த்தே அரசியல் கற்றுக்கொண்ட இவர்கள், ஈழப் பிரச்சினை என்ற சினிமாக் கொட்டகை யில் குவாட்டரோடு உட்கார்ந்துகொண்டு விசிலடிப்பதை அரசியல் என்று எண்ணுகிறார்கள். அப்பாவி மக்களின் உயிர்களோடு விளையாடும் இவர்கள் இதற்குள்ளிருந்து பணவேட்டையை நடத்திக் கொள்கிறார்கள்.

சுபாஸ்கரன் கைதானதாகப் பரப்பப்பட்ட வதந்தி லைக்காவைப் புனிதப்படுத்தவே! தென்னிந்தியாவில் சினிமாத் துறைக்குள் லைக்காவை நிரந்தரமாகப் புகுத்தவும், புலம் பெயர் நாடுகளில் தமிழர்களின் தலையில் மிளகாய் அரைக்கவும் இப் புனிதப்படுத்தல் தேவைப்படுகின்றது. இதற்கு ஊடகங்கள் துணை போகின்றன.

# பயனளிக்கும் வினாகிரி!




☯ ஒரு கப் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி வினாகிரி கலந்து ஃப்ரிட்ஜைத் துடைத்தால் வாடை நீங்கி கறைகள் நீங்கி ஃப்ரிட்ஜ் பளிச்சென்று ஆகிவிடும்.

☯ வெற்றிலைக்கறை துணியில் பட்டால் அந்த இடத்தில் வினாகிரியை ஊற்றித் தேய்த்துக் கழுவினால் கறை மறைந்துவிடும்.

☯ அலுமினிய குக்கரின் உட்புறம் கறுப்பாக இருந்தால் சிறிது வினாகிரியைத் தடவி 15 நிமிடங்கள் கழித்து சிறிது நீர் ஊற்றிக் கொதிக்கவிட்டால் கறை நீங்கி குக்கர் பளிச்சிடும்.

☯ வினாகிரியுடன் சோக் பவுடரைக் கலந்து பூசி வோஷ்பேசினைக் கழுவினால் கறை நீங்கி வோஷ்பேசின் பளிச்சிடும்.

☯ சமையலறை அலுமாரியின் தட்டுக்களை வாரம் இருமுறை வினாகிரி கலந்த நீரால் துடைத்து வந்தால் பூச்சித் தொல்லைகள் இருக்காது.

☯ பாத்திரங்களிலுள்ள ஸ்க்ரூ துருப்பிடித்துக் கொண்டால் வினாகிரியை இரண்டு சொட்டுவிட்டு சிறிது நேரம் கழித்துத் திருகினால் ஸ்க்ரூவை சுலபமாக எடுக்க முடியும்.

☯ வினாகிரி கலந்த நீரில் பாதங்கள் மூழ்கும்வரை அரைமணி நேரம் வைத்திருந்து பிறகு கழுவினால் கால்விரல்களில் உள்ள நகங்களில் மறைந்திருக்கும் அழுக்கு வெளியேறி நகங்கள் சுத்தமாகிவிடும்.

☯ எவர்சில்வர் பாத்திரங்கள், காஸ் அடுப்பு, குளியலறையில் உள்ள மாபிள் கறை, கண்ணாடிப் பாத்திரங்கள், பீங்கான் பாத்திரங்கள் இவற்றை வினாகிரியால் சுலபமாகச் சுத்தம் செய்துவிடலாம்.

# நெல்லிக்கனி ஜுஸ்



♦ உடல் பருமனைக் குறைக்கிறது.
♦ முகத்தில் பரு மற்றும் கரும்புள்ளியை நீக்குகிறது.
♦ தலைமுடி உதிர்வதைத் தவிர்க்கிறது.
♦ கண்பார்வை தெளிவு பெறுகிறது.
♦ இருமல், அஸ்மா நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்கிறது.
♦ இரத்தத்தைச் சுத்திகரித்து சிவப்பணுக்களை அதிகப்படுத்துகிறது.
♦ மாதவிடாய் பிரச்சினைகளை நீக்குகிறது.
♦ ஞாபக சக்தியை அதிகப்படுத்துகிறது.
♦ உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது.
♦ விற்றமின் "சி" சத்து நிறைந்தது.

# அட்டக் கத்திக் கலைஞர்கள்... மொண்ணைக் கத்தி மக்கள்!

- அலெக்ஸ் பால் மேனன் -




எனக்கு தமிழ் சினிமாவின் மீதோ சினிமாக் கலைஞர்கள் மீதோ எந்தக் கோபமும் கிடையாது, ஏனெனில் அவர்கள் வியாபாரிகள். அவர்கள், மேம்போக்காய் சிலிர்க்க வைக்கவும், மேலோட்டமாய் அரிப்பெடுக்க வைக்கவும், அரித்த இடத்தில் சொகு சாய் சொறிந்தும் கொடுத்து காசு கறக்கத் தெரிந்திருக்கும் வித்தகர்கள்.

அவர்களிடம் சமூகப் பொறுப்பை எதிர்பார்ப்பதும், ஆழ்ந்த சிந்தனையும், தெளிந்த படைப்புகளையும் எதிர்பார்ப்பது "சிட்டுக்குருவி லேகியம் விக்கிறவனிடம் போய், கான்சர் கட்டிக்கு கீமோதெரபி கேட்பது மாதிரி" அதனால் இந்தக் கட்டுரையின் எள்ளல், துள்ளல், நகை, நட்டு, துப்பல், தூற்றல் எல்லாம் என் இனிய தமிழ் மக்களையே போய்ச் சேரும்.

முதலாவதாக சமூகத்தைப் பீடித்திருக்கும் நோய்களைப் பற்றிய புரிதல் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது? ஒரு விஷயத்தை பொத்தாம்பொதுவாகப் புரிந்து கொள்கிறோமா, அல்லது ஆழமாய், அகலமாய், புத்தகங்கள், இணையம் வாயிலாக வாசித்தறிகிறோமா? நம்முடைய அறிவுக் குறைபாடுதானே நாம் சார்ந்த சமூகத்துக்கும், அந்த சமூகம் பெற்றெடுத்திருக்கும் கலைத் தெய்வங்களுக்கும் இருக்கும்..

அப்படியிருக்க சினிமாக்காரனைச் சாடுவதென்ன முறை? இப்படி சமூக விஷயங்களைப் பற்றி மேம்போக்கான ஆர்வமும் மேலோட்டமான புரிதலும் கொண்டதனால் தானடா ஒருநாள் முதல்வர்களால் உங்கள் நாட்டைத் திருத்த முடிகிறது. திருத்தி உங்கள் சில்லறைக் காசுகளைத் திருடி அவர்கள் கல்லா கட்ட முடிகிறது.

ஒரே ஒரு ஹீரோ, இல்லையென்றால் நாலு கோபக்கார இளைஞர்களால் யாரையாவது உள்துறை மந்திரி அல்லது முதல் மந்திரியைக் கடத்தி அவர்களின் அறிவுக் கண்களை நாலு வசனத்தில் திறக்க முடிகிறது!

மொத்தத்தில் உங்கள் பிரச்சினைகளுக்கான காரணம் நீங்கள் அல்ல, அதற்கான தீர்வும் உங்களிடம் இல்லை என்ற உங்கள் மொண்ணைப் புரிதலால் தானடா வீராணம் குழாய்க்குள்ளே உட்கார்ந்தால் உங்கள் வீட்டுக் கிணத்திலயும், வயலிலயும் தண்ணி வந்திடும் என்று நம்புறீங்க..

கை தட்டித் தட்டிக் காசுக்கு வசனம் பேசுற எல்லாரையும் தலைவனா, வாழ்க்கையை உய்விக்க வந்த பெருமானா நினைச்சு, இவர் அரசியலுக்கு வந்தா நல்லா இருக்குமா, அவர் வந்தா நம்மளக் காப்பாத்திடுவாரா என்று கண்ணில ஏக்கத்தோட திரியிறீங்க!

சமூகப் பொறுப்பும் நிஜ அக்கறையும், மாற்று அரசியல் பற்றிய அறிவும், சமூக மாற்றம் கொணர வேண்டும் என்ற துடிப்பும் உள்ளவர்கள் சினிமாத்துறையிலிருந்தும், மற்ற எந்தத் துறையிலிருந்தும் வரலாம், வரவேண்டும். ஆனால் முதல் படம் நடித்த உடனே முதல்வர் நாற்காலியில் குந்த வேண்டும் என்று விரும்பும் விடல்லத்தனங்கள் அல்ல.

அரைவேக்காட்டு சினிமா வசனங்களுக்கு கைதட்டிப் பொங்கிப் புளகாங்கிதம் அடைந்து விட்டு, உங்கள் மூளையையும், மூலதனங்களையும் அடகுவைத்து விட்டு, தமிழனின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கும் தலைவன் ஒருவன் பிறப்பான் என்று, நடக்கும் எந்தப் பிரச்சினைகளுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல் பீட்சா சாப்பிட்டு, டிவி பாத்துக்கொண்டே, உலகத்தையே நொட்டை சொல்லிக் காலத்தை கடத்த உன்னால் மட்டும்தான் தமிழா முடியும்.

ஒரு சிறுகதை நினைவுக்கு வருகிறது. ஒரு ராசாவுக்கு ஒருநாள் தன் அரண்மனைக் குளத்திலே, பால் நிரப்பிக் குளிக்க ஆசை வந்ததாம், குளத்துத் தண்ணியை எல்லாம் வெளியேற்றிவிட்டு, எல்லா குடிமக்களையும் கூப்பிட்டு, இன்று இரவு விடிவதற்குள் ஒவ்வொரு குடும்பமும் ஒரு செம்பு பால் கொண்டு வந்து குளத்திலே ஊற்ற வேண்டும் என்று உத்தரவு போட்டானாம். குடிமக்களும், உத்தரவு ராசாவே என்று வீட்டுக்குப் போனார்களாம். நாள் விடிந்தது, ராசா கண்விழித்துப் பாத்தாராம், குளத்தில ஒருசொட்டுப் பாலில்லை, வெறும் தண்ணிதான். எல்லாப் பயலும், இருட்டிலே தான் மட்டும் ஒரு செம்பு தண்ணி ஊத்தினால் தெரியவா போகுது என்று, தண்ணி மட்டும்தான் ஊத்தியிருக்கிறார்கள், ஒருத்தரும் பால் ஊற்றவில்லை.

இப்படித்தான் தமிழா உன் கடமையை மறந்துவிட்டு, நமக்குப் பதிலா வேற எவனாவது வந்து நம் பிரச்சினைகளுக்குத் தீர்வு குடுப்பான் என்று எந்நேரமும் வெளியிலேயே பராக்குப் பார்த்துக்கொண்டு இருக்கிறாய்!

நம் பிரச்சினைகளுக்குக் காரணங்களும், காரணிகளும் நமக்கு வெளியில் இல்லை, நமக்குள்ளேயே தான் இருக்கின்றன என்பதை உணர்! நம் தவறுகள் என்னென்ன, நம் நடவடிக்கைகளில் என்னென்ன மாற்றம் கொணர்ந்தால் என்னென்ன நன்மைகள் விளையும் என்பதை ஆய்ந்தறி!

வெறுமே வீர வசனங்களும், பஞ்ச்(!) டயலாக்குகளும் நம் வாழ்வைத் திருத்தி அமைக்கப் போவதில்லை, திறந்த மனதோடு பிரச்சினைகளை ஆய்ந்து, தீர்வுகள் அறிந்து, அதைச் செயல்படுத்தி, நமக்கு நாமே உதவினால் ஒழிய, நமக்கு உய்வில்லை என்பதை உணர்!

அட்டைக்கத்திகளை நம்பி நேரம், பணம் விரயமிடாமல், உன் மொண்ணைக் கத்தி மூளையைக் கொஞ்சம் கூர்தீட்டு தமிழா! தலைவர்களை பொம்மலாட்டத் திரையில் தேடாதே தமிழா!

பின்குறிப்பு: உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலை எவ்விதத்திலும் ஆதரிப்பது என் நோக்கமல்ல, அவர்களைவிட பெரிய குற்றவாளி, அடிப்படைப் புரிதலற்ற, அறியாமையிலிருக்கும் நாமே என்பதை வலியுறுத்தவே இந்த ஆதங்க எழுத்து.

"தன்னூற்று"கள் தானே பொங்கி நிரம்புவதில்லை, நீயும் நானும் சேர்ந்து நிரப்பினால் தான் அது காலாகாலத்துக்கும் நிறைந்து நம் தேவை தீர்க்கும். கொக்ககோலாவும் பெப்சியும் சிறு எதிரிகள், நீர் மேலாண்மை பற்றிய உன் அடிப்படை அறிவின்மையே பெரும் எதிரி!

# பாரதியார் எப்படி இருப்பார்?

பாரதியார் சுந்தரரூபன். மாநிறம். ஐந்தரை அடிக்குக் கொஞ்சம் அதிகமான உயரம். அவருடைய மூக்கு அழகான மூக்கு. அவருடைய கம்பீரமான முகத்துக்கு அளந்து அமைக்கப்பட்டதைப் போலிருக்கும் அந்த அழகிய நாசி. ஸீஸர், ராஜகோபாலாச்சாரியருடையதுபோல கருட மூக்கல்ல. ஸீஸர் மூக்கு நடுவில் உயர்ந்து நுனியில் கூர்மையாகி கண்டவர்களைக் கொத்துவது போலத் தோன்றும். பாரதியாரின் மூக்கு கடைசல் பிடித்தது போலிருக்கும். நீண்ட நாசி. அந்த நீளத்தில் அவலட்சணம் துளிகூட இருக்காது.

பாரதியாரின் கண்கள் செவ்வரி படர்ந்த செந்தாமரைக் கண்கள். இமைகளின் நடுவே, அக்கினிப் பந்துகள் ஜ்வலிப்பனபோலப் பிரகாசத்துடன் விளங்கும். அந்தக் கண்களை எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் தெவிட்டாது.

அவருடைய நெற்றி பரந்த நெற்றி. நெற்றியின் இரண்டு கங்குகளிலும், நிலத்தைக் குடைந்துகொண்டு போயிருக்கும் கடலைப்போல முகம் தலைமயிரைத் தள்ளிக் குடைந்துகொண்டு போயிருக்கும். கங்குகளின் மத்தியில் முகத்தின் நடு உச்சியில், மயிர் கொஞ்சம் நிமிர்ந்து நிற்கும். நெற்றியிலே இந்தச் சேர்மானம் அவருக்கு வர்ணிக்க முடியாத அழகைக் கொடுத்தது. பாதிக்கும் அதிகமாக அவர் தலை வழுக்கை.

இந்த வழுக்கையை மறைத்து மூடுவதற்காக, கங்கு கேசத்தை இரண்டு பக்கங்களிலுமிருந்து உச்சந்தலைக்குக் கொண்டுபோய் அதைப் படியச் செய்யும் பாரதியாரின் கவலை நிரம்பிய முயற்சி சிறு பிள்ளைகளுக்குச் சிரிப்பை உண்டாக்கலாம். தலைமயிரைச் சிங்காரிப்பதில் அவர் அரைமணி நேரத்துக்கு மேல் செலவழிப்பார். நாளுக்கு ஒரு மாதிரியாகத் தலைமயிர் அணிவகுப்பு.

பாரதியாருக்கு மீசை உண்டு. அது பார்க்க ரொம்ப நேர்த்தியாக இருக்கும். கண்ணைக் குத்தும் கெய்ஸர் மீசையல்ல, கத்தரிக்கோல் பட்ட "தருக்கு" மீசையல்ல. தானாக வளர்ந்து, பக்குவப்படும் அழகும் அட்டகாசமும் செய்யும் மீசை. அவரது வலக்கை எழுதாத நேரங்களில் எல்லாம் அநேகமாய் மீசை மீது இருக்கும். மீசையை முறுக்குவதுபோல் தோன்றாது. மீசைக்கு "ட்ரில்" பழக்கிக் கொடுப்பது போலத் தோன்றும்.



இடக்கையில் ஒரு நோட்டுப் புத்தகம், சில காகிதங்கள், ஒரு புத்தகம் - இவை கண்டிப்பாய் இருக்கும். கோட்டுப் பையில் ஒரு பெருமாள் செட்டி பென்சில் இருக்கும். பவுண்டன் பேனா அவரிடம் தரிப்பதில்லையோ என்னவோ, பவுண்டன் பேனாவினால் அவர் எழுதி நான் பார்த்ததில்லை! எப்பொழுதும் பென்சில் எழுத்துத்தான்.

("மகாகவி பாரதியார்" என்ற நூலில் வ.ரா.)








# நிகழ்வுகளின் பதிவுகள்....

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதி அதிபர் திருமதி யமுனா நந்தகுமார் வரவேற்புரையாற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திருமதி ரட்ணம் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

யாழ். நாவாந்துறை கண்ணாபுரம் பிரதேசத்தில் தீபாவளி அன்று நடைபெற்ற சிறுவர் மற்றும் முதியோர்களுக்கான போட்டி நிகழ்வில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டபோது... (105)



செலான் வங்கியின் நெல்லியடி கிளையினரால் நெல்லியடி இமையாணன் பாடசாலையில் அண்மையில் நடாத்தப்பட்ட சிறுவர் சந்தை... (18)








வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழாவின் முதல் நாள் நிகழ்வு... (70)

மண்டைதீவு முகப்புவயல் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற சூரசம்ஹார நிகழ்வின் போது.... (51)

# மண்சரிவால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு மன்னார் பிரதேச சபை ஒருஇலட்சம் நிதிஉதவி

## தவிசாளர் மாட்டின் டயஸ் வழங்கினார்

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மலையக உறவுகளுக்கு மன்னார் பிரதேச சபையினர் தங்களது ஒரு நாள் வேதனமான ஒரு இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளனர்.

மலையக மக்கள் மண்சரிவு பேரிடரினால் உறவுகள், சொந்தங்கள், சொத்துக்கள், வீடுகளையிழந்து தவித்துவருகின்றனர்.

இவ்வாறான மக்களுக்கு உதவி நிதியாக மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் இணைந்து தங்களது ஒருநாள் வேதனத்தை தவிசாளர் மாட்டின் டயஸ் தலைமையில் காசாக வழங்கியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபையின தவிசாளர் மாட்டின் டயஸ் தலைமையிலான இந்த முன்மாதிரியான செயலை மன்னார் செயலக உயரதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள ஏனைய அரசாங்க திணைக்களங்களும், மாலையக உறவுகளுக்கு பல்வேறுபட்ட விதத்தில் உதவிகளை வழங்க துரித நடவடிக்கையில் குதித்துள்ளனர்.

## தங்க மோதிரம் வழங்கி உபஅதிபர் கௌரவிப்பு

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் உப-அதிபர் சொ.ஜெயவீரசிங்கத்தின் பன்முக கல்விச் சேவையைப் பாராட்டி அவரது மணிவிழாவில் வைத்து ஆசிரியர்கள் தங்க மோதிரம் அணி வித்து கௌரவித்தனர். அன்றையதினம் "ஜெயம்" எனும் தலைப்பிலான மலர் வெளியீடும் கல்லூரி முதல்வர் பா. மாதவன் தலைமையில் இடம்பெற்றது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி சுதா ரமேஷ் மணிவிழா நாயகனின் பன்முக சேவையை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சி.சிவரஞ்சினி அவரின் கல்விப்புல சாதனை குறித்து வாழ்த்துக்கவியை வழங்கினார்

மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட மாலைகள் அணிவித்து மணிவிழாநாயகன் சொ.ஜெயவீரசிங்கத்தை கல்லூரிச் சமூகம் பாராட்டியதை காணக்கூடியதாக இருந்தது. (05)

## ஆவரங்கால் சிவன் வீதியை புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேசத்தின் ஆவரங்கால் சிவன் வீதி பலவருடங்களாக எவராலும் கவனிக்கப்படாதிருப்பதையிட்டு அவ்வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இவ்வீதியூடாக நடராஜ இராமலிங்க வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்கள் பெருங்கஷ்டத்தின் மத்தியில் பாடசாலைக்கு செல்வதைக் காணமுடிகிறது. தற்போது மழை பெய்துவருவதால் வீதியில் உள்ள குண்டு குழிகளில் வெள்ளம் தேங்கிநிற்கிறது இதனால் மாணவர்கள் வேறுபாதைகளூடாக பெரும் சிரமத்தின் மத்தியில் பாடசாலை சென்றுவருகின்றனர்.

கோப்பாய் பிரதேசத்தில் ஒரு பிரபல பாடசாலையாக இது இருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் கவனமெடுத்து இவ்வீதியை திருத்தி அமைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (08)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்போதனாவைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை பிரிவினால் பாடசாலை ஆசிரியர்களுக்கான சுகாதார அறிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் ஆரோக்கியவாழ்வுக்கான வழிமுறைகள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளது.

## கோப்பாய் முதியோர் பேரவையின் இரண்டாவது நிறைவு விழா

வலிகாமம் கிழக்கு கோப்பாய் மத்திய முதியோர் பேரவையின் இரண்டாவது நிறைவு விழா அண்மையில் கோப்பாய் மத்திய முதியோர் பேரவையின் தலைவர் எம்.சண்முகலிங்கம் தலைமையில் கோப்பாய் சிறிசித்திர வேலாயுத சுவாமி கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதியோர்கள் பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு உடுபுடவைகளும் வழங்கப்பட்டன. அத்துடன் முதியோர்களை மகிழ்வூட்டும் நிகழ்வில் முதியோர்களின் பாட்டு பேச்சு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக எதிர்க்கட்சித்தலைவர் இ. ஐங்கரன், வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் திருமதி வி. முகுந்தன், கோப்பாய் பிரதேச மட்ட முதியோர் பேரவையின் தலைவர் இ. மயில்வாகனம், கோப்பாய் மத்தி கிராமசேவையாளர் பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

## சேதப்படுத்திய வீதிப்பலகை மீண்டும் நிர்மாணிப்பு




யாழ். மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் காணப்பட்ட 'கலிபா அப்துல்காதர்' வீதிப்பலகை சிலரினால் அடித்து நொறுக்கப்பட்டதைத முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் பீ.சரழல் அனாம் ஆணையாளரின் கவனத்திற்கு உட்படுத்தியதினால் உடனடியாக இவ் வீதிப்பலகை அதே இடத்தில் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டது. (105)

## தமிழ் விரிவுரையாளராக மகாலிங்கசிவம் நியமனம்

கோப்பாய் ஆசிரியர்பயிற்சிக் கலாசாலையின் தமிழ் விரிவுரையாளராக மகாலிங்கசிவம் நியமிக்கப்பட்டுள்ளார்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் நவாலி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் விரிவுரையாளராக தெரிவு செய்யப்பட்ட இவர் இன்று முதல் தனது கடமையை பொறுப்பேற்கவுள்ளாரென தெரிவிக்கப்படுகின்றது. (17)




## தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு (IT)

ஆரம்பப் பாடசாலை வலையமைப்பின் ஊட்டத்திற்கான 'அபிவிருத்தியடையும் 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் நிகழ்ச்சி' இன் பொருட்டு தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக கல்வியமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு உட்பட தகவல் தொழில்நுட்ப பாடம் வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 'செயலாளர், கல்வி அமைச்சு, பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

நாடு முழுவதும் 226 இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேலதிக விபரங்களை கடந்த 28.10.2014 ஆம் திகதி வெளியாகிய தினகரன் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

## தேசிய வீடமைப்பு அதிகார சபை பதவி வெற்றிடங்கள்

நிர்மாணம், பொறியியலாளர் தேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

01. கணக்காளர்கள்
02. உள்ளக கணக்காளர்கள்
03. முகாமையாளர் (தகவல் தயாரிப்பாளர்)
04. சட்ட அதிகாரிகள்
05. மதிப்பீட்டு அதிகாரி
06. கணக்கியல் அதிகாரிகள்
07. மதிப்பீட்டு உதவியாளர்கள்
08. மொழி பெயர்ப்பாளர்கள்
09. நில அளவை உதவியாளர்கள்
10. நில அளவை வரை படக் கலைஞர்
11. மேலை மேலாளர் (மின்சாரம்)
12. வேலை மேலாளர் (மோட்டார் இயந்திரவியல்)
13. தொழில்நுட்ப உதவியாளர்கள்
14. நீர்க்குழாய் பொருத்துநர்கள்
15. அளித்தல் உதவியாளர்கள்

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்து மற்றும் நிர்வாகம்), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு - 02' என்ற முகவரிக்கு கிடைக்கும்படியாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இதற்கான கல்வித் தகைமைகளையும், மேலதிக விபரங்களையும் கடந்த 22.10.2014 ஆம் திகதி வெளியாகிய தினகரன் பத்திரிகை யில் பார்வையிட முடியும்.

## வினைத்திறமை காண் பரீட்சைகள்

II ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (புதிய பாடத் திட்டம்) - 2014 (II) எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (பழைய பாடத் திட்டம்) - 2014 (II) எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

I ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (புதிய பாடத் திட்டம்) - 2014 (II) எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

ICMASL பரீட்சை எதிர்வரும் 15, 16, 22, 23 ஆகிய தினங்களில் கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (செய்முறைப் பரீட்சை) எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

CIMA பரீட்சை எதிர்வரும் 18, 19, 20 ஆம் திகதிகளில் கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) - 2014 (II) எதிர்வரும் 22 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு:- சி.என்.எச். சாலிஸ்

# தேர்தலில் மகிந்தவுக்கே ஆதரவு
# வடக்கிலும் கிழக்கிலும் மனமாற்றம்

## நாளுக்கு நாள் அதிகரிக்கிறது ஆதரவு அலை

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்காக முன்னரை விடவும் அதிகமான உத்வேகத்துடன் உழைக்கப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ் பிரதேசங்களின் அமைப்பாளர்களும் கட்சியின் வடக்கு கிழக்கு தமிழ் முக்கியஸ்தர்களும் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆட்சிக் காலப்பகுதியிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் நாடு பாரிய வளர்ச்சியைக் கண்டு வருகிறது.

ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றியமைக்கும் அவரது எண்ணக்கரு வெற்றி பெற்று வருகிறது. ஜனாதிபதியின் இம் முயற்சியில் தமிழ் மக்களும் தங்களைப் பங்குதாரர்களாக்கி ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் அடுத்த தேர்தலிலும் அதற்கடுத்து வரும் அனைத்துத் தேர்தல்களிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவது என தாம் திடசங்கற்பம் கொண்டுள்ளதாகவும் கட்சியின் பிரதான அமைப்பாளர்கள் சகலரும தெரிவித்துள்ளனர்.

தமது மாவட்ட மற்றும் தொகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் இந்த உத்வேகத்தைத் தமக்கு தந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தலைநகர் உட்பட தமிழ் மக்கள் வாழும் சகல பிரதேசங்களிலும் இன்று அம்மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையை ஏற்படுத்தித் தந்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்பதனைத் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை.

இன்று சில தமிழ் அரசியல்வாதிகள் தமது அரசியல் இருப்பிற்காக தமிழ்த் தேசியம் என்று வீர வசனங்களைப் பேசி வருகின்றனர். அன்று யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த போது, இந்த அரசியல்வாதிகளில் பலர் இலங்கையிலேயே இருக்கவில்லை. அவர்கள் தமது உறவினர்களுடன் ஐரோப்பிய நாடுகளில் உல்லாசமாக இருந்தனர்.

ஜனாதிபதி மூலமாக நாட்டில் சமாதானம் ஏற்பட்டதும் இங்கு ஓடி வந்து சமாதானத்தை ஏற்படுத்தித் தந்த தலைவருக்கு எதிராகவே செயற்படுகின்றனர். அவரை வீழ்த்த வெளிநாடுகளுடனும் எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து சதி செய்கின்றனர். இதற்குத் தமிழ் மக்கள் ஒரு போதும் சோரம் போகமாட்டார்கள், விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள் எனவும் இந்த அமைப்பாளர்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.

இன்று வடக்கிற்கான யாழ் தேவி 24 வருடங்களுக்குப் பின்னர் ஓடுகிறது என்றால் அதற்கு ஜனாதிபதியே காரணம், கடந்த புதன்கிழமை மலையகத் தில் மண்சரிவு என்றதும் அங்கு நேரடியாகச் சென்று பாதிக்கப் பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி தேவையான உதவிகளை அதிகாரிகள் வழங்க ஜனாதிபதியால் பணிப்புரைகளையும் ஜனாதிபதி விடுத்தார். இவரின் இடத்தில் வேறொருவர் இருந்திருந்தால் திரும்பியும் பார்த்திருக்கமாட்டார். இவ்வாறு மக்களுடன் மக்களாக இருந்து மக்களது சுக துக்கங்களில் பங்கெடுக்கும் ஜனாதிபதியே எமக்குத் தேவை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# தொடரும் சீரற்ற காலநிலை மழை பொழிய வாய்ப்பு

## வானிலை அவதான நிலையம் அறிவிப்பு



(கொழும்பு)

நாடு முழுவதும் சீரற்ற கால நிலை தொடர்வதால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மழை பொழியக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படு வதாக வளிமண்டவலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான கடலோரப்பகுதிகளில் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்பு திருகோணமலை வரையான கடலோரங்களில் அதிக மழைக் கான சாத்தியம் நிலவுகிறது. மேலும வடமேற்கு கடலோரப்பகுதிகள் அதிகளவில் கொந்தளிப்புடன் காணப்படலாம் எனவும் வடக்கு கடலோரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலா மென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு கரையோரமாக மணிக்கு 10-30 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் எனவும் இக்காற்றின் வேகம் சுமார் 50 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் எனவும் வானிலை அவதான நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

காலியிலிருந்து பொத்துவில் ஊடாக மாத்தறையிலிருந்து கொழும்பு, முல்லைத்தீவு, மன்னார், சிலாபம், திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மணிக்கு 50-60 கி.மீ அளவில் காற்று வீசலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன் மழை பெய்வதற்கான சாத்தியங்களும் காணப்படுவதாக வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக மீனவர்கள் மற்றும் கடற்படையினர் அவதானமாக செயற்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

# தெற்கில் இரட்டைக்கொலை ஒருவர் கைது ஒருவர் தப்பி ஓட்டம்




கிரிஉல்ல மற்றும் தெலிகட ஆகிய பிரதேசங்களில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை கிரிஉல்ல - ஹால்பனே பிரதேசத்தில் கத்தியால் குத்தப்பட்டு 46 வயதான ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் 53 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை தெலிகட - மெதவல பிரதேசத்தில் 35 வயதான ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாககப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பிரசேத் தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு செல்வதை தவிர்க்க கோரிக்கை



(கொழும்பு)

கொஸ்லாந்த மீரியபெத்த பிரதேசத்திற்கு பொதுமக்கள் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பிரதேசத்தில் இடம் பெற்ற அனர்த்தத்தை பார்வையிடுவதற்கு அதிகளவான மக்கள் வாகனங்களில் செல்வதாகவும் அந்த வாகனங்களை மீண்டும் திருப்பியனுப்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த பிரதேசத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அங்கு செல்வதை தவிர்த்து கொள்ளுமாறு பொதுமக்களை அறிவுறுத்துவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# நகரை அழகுபடுத்தும் திட்டம் குருநாகல் நகரில் ஆரம்பம்

குருணாகலை நகரை அழகு படுத்துவதுடன் மக்களுக்கான ஓய்வு மற்று பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி அமைச்சு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

குருணாகலை குளம் மற்றும் அதனை அண்மித்த பகுதி களே அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. 3.5 கிலோ மீற்றர் நீளமான சைக்கிள் ஓட்டப்பாதை-உடற்பயிற்சிக்கான பிரதேசம் என்பவை அமைக்கப்படவுள்ளதுடன் தற்போதுள்ள மரங்களுடன் மேலும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்படவுள்ளன.

மேலும் வாகன நிறுத்தம்-குறித்த பிரதேசத்தில் ஒளி அலங்காரங்களை உருவாக்குதல்- வீதி இருக்கைகள் அமைததல்- ஓய்விடம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் அமைத்தல் என முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்காக 217.0 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# "ஏழிசையாய் இசைப்பயனாய்" பன்முகப் பரிமாணம் பெற்ற நூல்




ஒரு நூலைப் பற்றி அறிவதானால் அதன் ஆசிரியரைப் பற்றி முதற்கண் அறிய வேண்டும். ஏழிசையாய் இசைப்பயனாய் என்னும் நூலின் ஆசிரியர் அன்பர் சொர்ணலிங்கம் இவர் மரபு வழியாகச் சைவசமயத்தில் ஆர்வமும் அபிமானமுங்கொண்ட பெருமக்கள் வாழும் ஏழாலையிற் பிறந்து வளர்ந்தவர். அங்குதான் சைவ சித்தாந்த வித்தகரான பெரியார் ஞானப்பிரகாசமும் பண்டிதர் கந்தையாவும் வாழ்ந்தனர்.. விஞ்ஞானப் பட்டதாரியான இந்நூலாசிரியர் அப்பெருமக்களின் அரவனைப்பைப் பெற்றவர் . அதனால் இவருக்கு சைவசமயம் மீதுள்ள இயல்பான அபிமானம் சூரியப்பிரகாசம் போல ஒளிபெற்றது.

சைவசமய சித்தாந்த நூல்களைத் துருவி ஆராய்தல் தமிழர்தம் நாகரிகத்தின் உன்னத கோலங்களில் ஒன்றான இசைக்கலை பற்றி ஆழமாக சிந்தித்தல் என்பவற்றை நண்பர் சொர்ணலிங்கம் பல தசாப்தங்களாக தனது தொழிலாகக் கொண்டவர். 1995 இல் நடைபெற்ற இடப்பெயர்வினைக் கேடாகக் கொள்ளாது நாடு கடந்து செல்லாது கொழும்புக்கு வந்து குடித்தனமாகி சைவசமயத்தையும் சைவ மரபிலுள்ள வாழ்வியல் நெறிகளையும் கற்பதில் முழுமையாக ஈடுபட்டார் அந்த ஈடுபாட்டினதும் அனுபவத்தினதும் பயனாகியதே இவரது விசாலமாக விரிந்த இந்நூல்

இந்நூல் இசை, சைவ சித்தாந்தம் என்பன பற்றி ஒரு புதிய பார்வையின் பயனாக எழுந்த நூல் அது சைவசித்தாந்த தமிழிசை என்பவற்றிற்கு இடையான தொடர்புகளை விளக்குவதற்கென வெளிவந்த நூல் .

தேவாரம் தமிழிசைக்கு மூலமானது. தேவார திருவாசகங்களில் அடங்கிய கொள்கைகளும் அனுபவங்களுமே சைவசித்தாந்த நெறிக்கு அடிப்படையானவை. விசித்திர சித்தானாகிய பல்லவர்குல அதியரசன் மகேந்திரவர்மன் காலம் முதல் பெரியார் இராமசாமி நாயக்கர் காலம் வரை தோன்றி வளர்ச்சி பெற்ற தமிழர் நாகரிகம் உலகப் பிரசித்தி பெற்றதும் பல பரிமாணங்களைக் கொண்டது ஒப்புவமையிலாத இனிமை செறிந்த கடவுள் விளக்கமான பக்திப் பாடல்களும், இசை, நடனக் கலைஞர்களும் கட்டட சிற்ப முறைகளும் உன்னத கோலங்களாகும் இத்தகைய பெருமைகளுக்குரிய தமிழர் தம் பண்பாட்டு நெறியை காலச்சக்கரமான சூறாவளியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே சொர்ணலிங்கத்தின் நோக்கமாகும்.

இந்நூலில் இசைக்கலை சைவசித்தாந்த நோக்கில் மிகவும் விரிந்த நிலையில் விளக்கப்படுகிறது. பாடல் மரபுகளும் வாத்தியக் கருவிகளும் வர்ணிக்கப்படுகின்றன. பெருமளவிலான இசைவாணர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இசைத்துறையில் மேதைகளாக விளங்கிய ஈழநாட்டு விற்பன்னர்கள் அதிகமானோரைப் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளமை இந்நூலின் ஒரு சிறப்பம்சமாகும்.

நூலின் முடிவிலே கொல்லடைவும் ஓர் ஊசத்துனை நூற்பட்டியலும் அதன் இரண்டாம் பதிப்பில் இணைக்கப்படுவது அவசியமாகும்.

**கலாநிதி சி.பத்மநாதன்**
**தகைசார் பேராசிரியர்,**
**வரலாற்றுத்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**
**வேந்தர்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

## தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை- 2014

# கல்வி முரசு

1. மணி



**1. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

(1) நீரினால் பரவக்கூடிய ஒரு நோய் எது
  (1) கொலரா (2) தடிமன் (3) டெங்கு (4) சின்னமுத்து
(2) நீரில் மிதக்கக்கூடிய ஒரு பொருள் எது?
  (1) இரும்பு ஆணி (2) காந்தம் (3) பலகை (4) கருங்கல்
(3) நீரில் அமிழக்கூடிய ஒரு பொருள் எது?
  (1) கண்ணாடிக்குற்றி (2) தக்கை (3) ரெஜிபோம் (4) மரம்
(4) நீரில் கரையக்கூடிய ஒரு பொருள் எது?
  (1) தேங்காய்எண்ணெய் (2) சீனி (3) ரெஜிபோம் (4) இறப்பர்
(5) நீரை உறுஞ்சும் ஒரு பொருள் எது?
  (1) பொலிதீன் (2) ரெஜிபோம் (3) சாக்கு (4) காந்தம்
(6) நகர்ப்புற நீர் விநியோகம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது?
  (1) கிணறுகள் மூலம் (2) குழாய்க்கிணறுகள் மூலம்
  (3) குழாய்நீர் விநியோகம் மூலம் (4) ஆறுகள் மூலம்
(7) நீரைச் சுத்தம் செய்ய இடப்படும் இரசாயனப் பொருள் எது?
  (1) குளோரின் (2) உப்பு (3) கொண்டிஸ் (4) யூரியா
(8) கிணற்றிலிருந்து நீரை வெளியே பெற உதவும் முறை/முறைகள் எது/ எவை சரியானது?
  (1) துலா மூலம் (2) கம்பி மூலம்
  (3) காற்றாலை மூலம் (4) மேற்கூறப்பட்ட மூன்றும் சரி
(9) சுத்தமான நீரின் இயல்பு தொடர்பாக சரியானது?
  (1) மணம் இல்லை (2) சுவை இல்லை
  (3) நிறம் இல்லை (4) மேற்கூறப்பட்ட மூன்றும் சரி
(10) நீர் நிலைகளை மாசடையச் செய்வதற்கு காரணமாக இருப்பவை?
  (1) மனிதர்கள் (2) மிருகங்கள் (3) பறவைகள் (4) தாவரங்கள்

**02.** (1) வயலை உழுவதற்குப் பயன்படுத்தும் மிருகம் எது?
  (1) மாடு (2) யானை (3) குதிரை (4) கழுதை
(2) பாலைவனங்களில் பொதி சுமக்கப் பயன்படும் மிருகம் எது?
  (1) மாடு (2) கழுதை (3) குதிரை (4) ஒட்டகம்
(3) சூடு மிதிக்கப் பயன்படுத்தாத ஒரு மிருகம் எது?
  (1) எருது (2) யானை (3) எருமை (4) கழுதை
(4) முற்காலத்தில் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தாத் ஒரு மிருகம் எது?
  (1) ஒட்டகம் (2) குதிரை (3) கழுதை (4) நாய்
(5) முற்காலத்தில் செக்கு முறையில் எண்ணெயைப் பிரித்தெடுக்க எம் மிருகத்தைப் பயன்படுத்தினர்?
  (1) மாடு (2) கழுதை (3) குதிரை (4) ஒட்டகம்
(6) துணிகள், காகிதங்களை வெட்டுவதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவி எது?
  (1) பாக்குவெட்டி (2) கத்தரிக்கோல் (3) குறடு (4) கத்தி

**08. வினாக்களுக்கு விடை தருக.**

(1) இலங்கையில் காணப்படும் தகவல் தொடர்பு சாதனங்கள் நான்கு தருக.
........................................
(2) இலங்கையில் விற்பனையாகும் சஞ்சிகைகள் நான்கின் பெயர்களைத் தருக.
........................................
(3) இலங்கையில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகள் மூன்றின் பெயர்களைத் தருக.
........................................
(4) வாழ்த்து மடல்கள் அனுப்பப்படும் நான்கு சந்தர்ப்பங்கள் தருக.
........................................
(5) பத்திரிகைகளில் வெளிவரும் விடையங்கள் சில கூறுக.
........................................

**பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

**09.**

| வெளிநாடுகளுடனும் | புத்தகங்கள் | தபாற்கந்தோருக்குச் | தகவல்களைப் | கடிதம் |
|---|---|---|---|---|

(1) நூலகத்தில்.............................. வாசிக்க முடியும்.
(2) கையடக்கத் தொலைபேசிகளால் .............................. தொடர்புகொள்ள முடியும்.
(3) தந்தி அடிப்பதற்கு.............................. செல்லல் வேண்டும்.
(4) மின்னஞ்சல் மூலம் .............................. ஒன்றை அனுப்பலாம்.
(5) இணையம் மூலம் பல.............................. பெறலாம்.

**10. வினாக்களுக்கு விடை தருக.**

(1) பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுவோர் யார்?
........................................
(2) உமது பாடசாலையில் புதிய கட்டிடம் அமைப்பதற்குரிய காரணங்கள் 2 தருக.
........................................
(3) பாடசாலையின் அபிவிருத்திக்கு மாணவர்களாகிய உங்களின் பங்கு என்ன?
........................................
(4) உமது பாடசாலையிலுள்ள நூலகத்தை அபிவிருத்தி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
........................................
(5) உமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வு கூடத்தை அபிவிருத்தி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
........................................

**11. வினாக்களுக்கு விடை தருக.**

(1) உமது பாடசாலை அமைந்துள்ள இடத்தையும் உமது பாடசாலை கட்டப்பட்டுள்ள ஆண்டையும் தருக.
(2) உமது பாடசாலையின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் விபரிக்குக.
(3) உமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய இரு அதிபர்களின் பெயர்களைத் தருக.
(4) உமக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைத் தருக.
(5) உமது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் வீதிகளின் பெயர்களைத் தருக.


(7) ஆணிகளை அடிப்பதற்கும் ஆணிகளைப் பிடுங்குவதற்கும் பயன்படுத்தும் ஒரு கருவி எது?
(1) குறடு (2) சுத்தியல் (3) துளைப்பணம் (4) பாக்குவெட்டி

(8) தாள்களைத் துளை இடப் பயன்படும் கருவி எது?
(1) ஸ்டேப்லர் கருவி (2) பஞ்சர்கருவி (3) பென்சில் கட்டர் (4) குறடு


(9) பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வேலை இலகுவாக்கப்படவில்லை?
(1) கப்பியைப் பயன்படுத்தி நீர் எடுத்தல்
(2) பாக்குவெட்டியால் பாக்கு வெட்டுதல்
(3) பொருட்களை தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளுதல்.
(4) கைகளால் பாரமான கல் ஒன்றைத் தூக்குதல்.

(10) கற்களை உடைப்பதற்குப் பயன்படுத்தும் கருவி எது?
(1) குறடு (2) சுத்தியல் (3) பாக்குவெட்டி (4) கத்தி

**03.அ) பின்வரும் படங்கள் ஒவ்வொன்றினாலும் மனிதன் அடையும் பயன் ஒன்று வீதம் தருக.**



**ஆ) பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான பெயர்களை எழுதுக.**



**தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் கூட்டினுள் இடுக.**

கிணற்றுக்கு அருகில் மலசலகூடங்கள் இருத்தல் கூடாது.
(2) தினமும் கொதித்தாறிய நீரையே பருகுதல் வேண்டும்.
(3) நீரை சுத்தம் செய்வதற்கு உப்பு பயன்படுத்தப்படுகின்றது.
(4) இரும்பு ஆணி நீரை அகத்துறிஞ்சக்கூடிய ஒரு பொருளாகும்.
(5) மதுசாரம் நீரில் கரையக்கூடிய ஒரு பொருளாகும்.

**4. பொருத்தமான சொற்களை இணைக்குக.**

| | |
|---|---|
| நீரைச் சுத்தம் செய்வது | உப்பு |
| நீரில் கரையக் கூடியது | பருத்திப் பஞ்சு |
| நீரில் மிதக்கக் கூடியது | இரும்பு ஆணி |
| நீரில் அமிழக் கூடியது | குளோரின் |
| நீரை உறிஞ்சக் கூடியது | தக்கை |

**5. வினாக்களுக்கு விடை தருக.**

(1) சுத்தமான நீரைப் பருகுவதனால் கிடைக்கும் ஒரு நன்மை தருக.
(2) நீர் மாசுறும் இரு சந்தர்ப்பங்கள் தருக.
(3) நீரை மாசடையாது பாதுகாக்கும் இரு முறைகளைத் தருக.
(4) கிராமப்புற மக்கள் நீரைப் பெற்றுக்கொள்ளும் மூன்று முறைகள் தருக.
(5) மிதக்கும் ஒரு பொருளை எவ்வாறு அமிழச் செய்வீர் எனத் தருக.

**6. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| கரைகின்றது | ஆற்றில் | பீலியில் | சாக்கைப் | நிறம் |
|---|---|---|---|---|

(1) குளுக்கோஸை நீரில் இட்டதும் அது ..............................
(2) மலை நாட்டில் .............................. கிடைக்கும் நீரைப் பயன்படுத்துவர்.
(3) கிராமப்புற மக்கள் .............................. இருந்தும் நீரைப் பெறுகின்றனர்.
(4) வீடுகளில் சிந்திய நீரை உறுஞ்சுவதற்கு .............................. போடுவர்.
(5) சுத்தமான நீருக்கு .............................. காணப்படுவதில்லை.

**7. ஒப்படைகள்**

(1) உமது சுற்றாடலில் காணப்படும் உலோகத்தினால் ஆன பொருட்கள், மரத்துண்டுகள், கல், மண், பிளாஸ்ரிக் பொருட்கள் போன்ற கிடைக்கக் கூடிய எல்லாவகையான பொருட்களையும் சோதித்து, நீருள்ள ஒரு பாத்திரத்தில் ஒவ்வொரு பொருட்களாக இட்டு நடைபெறுவதை அவதானித்து அட்டவணைப்படுத்தவும். இதில் மிதப்பவை, அமிழுபவை, கரைபவை, நீரை உறிஞ்சுபவை எவை என அறிந்துகொள்ளவும்.

(2) உமது சுற்றாடலிலுள்ள மக்கள் நீர்த்தேவையை எம்முறைகளின் மூலம் பெற்றுக்கொள்ளுகின்றனர் என்பதை ஆராய்ந்து, அம்முறைகளின் மூலம் நீர் எப்படிப் பெறப்படுகின்றது என்பதை அறியப்படுத்தி, நீரைப் பெற்றுக்கொள்ளும் முறைகளுக்குரிய படங்களைச் சேகரித்து உமது பயிற்சிப் புத்தகத்தில் ஒட்டவும்.

# நூல் இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சிவத்திருமன்றம் செயலாளர் சிவத்திரு செ.சொர்ணலிங்கத்தின் தயாரிப்பில் ஏழிசையாய் இசைப்பயனாய் நூல் இறுவெட்டு வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலககேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பௌதீகவியல் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்னம் கௌரவ விருந்தினராக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை இசைத்துறை தலைவர் கலாநிதி ஸ்ரீ தர்ஷனன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மதிப்பீட்டுரையை இசைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி ந.வி.மு.நவரத்தினம் வழங்கவுள்ளார்.

# நெல் விதைப்பு நடவடிக்கை

அனலைதீவு பிரதேசத்தில் தற்போது நெல் விதைப்பு மற்றும் பனம்பாத்தி அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள விவசாயிகள் நெல் விதைப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதுடன் பனம்பாத்தி அமைப்பதிலும் மக்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவகத்தின் ஏனைய பிரதேசங்களில் நெல் விதைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அல்லைப்பிட்டியில் நெல் செய்கை மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# சமய தீட்சை பற்றி இந்து மாணவர்களுக்கு விளக்கமளிக்குமாறு அதிபர்களுக்கு பணிப்பு

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளில் கல்விகற்று வரும் 9,11,13,15 வயதுகளையுடைய சைவசமய மாணவர்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமய தீட்சை வழங்குவதற்கு நடவடிக் கைகள் மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு வலயக்கல்விப் பணிப்பாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

ஒவ்வொரு மாணவரும் சமய தீட்சை பெற வேண்டியதன் அவசியத்தையும் அதனால் ஏற்படும் பலன்களையும் பற்றி அறிந்துகொள்ள காலைப் பிரார்த்தனையின் போது நற்சிந்தனைகள் மூலம் விளக்கமளிப்பதன் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே பாடசாலை ஆலயத்தில் அல்லது அண்மையிலுள்ள ஆலயத்தில் தீட்சையயினைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தியாவின் பிரசித்தி பெற்ற தலங்களுக்கு தலயாத்திரை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது 05.02.2015 தொடக்கம் 15.02.2015 வரையான காலப் பகுதியில் தலயாத்திரை செய்யத் திட்டமிட்டிருப்பதால் தலயாத்திரை செய்ய விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பதிவு செய்யுமாறும் வலயக்கல்விப் பணிப்பாளரினால் அதிபர்களுக்கு தெரியப்படுத் தப்பட்டுள்ளது.

இதேவேளை சமயதீட்சை பற்றிய அறிக்கையினை எதிர் வரும் 12 ஆம் திகதிக்கு முன்னதாக வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

•(03)

# ஏகாதசி தீர்த்தம்

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஏகாதாசித் தீர்த்தம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பிக்கும், 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று ஸ்ரீமத் நாகவரத நாராயண சுவாமி ஸ்ரீதேவி பூமாதேவி சகிதம் அலங்காரத் தண்டிகையில் வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார்.

நண்பகல் 12 மணிக்கு அடியார்களுக்கு மகேஸ்வர பூஜை நடைபெறும்.

# கோழிக்குஞ்சு விநியோகம்



திவிநெகும (வாழ்வின் எழுச்சி) திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேசத்திற்குடபட்ட சில கிராம அலுவலர் பிரிவுகள உள்ளடங்களாக வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களில் 20 பயனாளிகளுக்கு திருநெல்வேலி கால்நடை திணைக்களத் தில் வைத்து கோழிக்குஞ்சுகள் அண்மையில் நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திதிரதாசனால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன், கால்நடைத்திணைக்கள உத்தியோகத்தர், கால்நடை வைத்திய அதிகாரி, டாக்டர் பாலியத்த, பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆஷூரா நோன்பு

இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள புனித ரம்ழானை அடுத்து இரண்டாவது இடத்தை இஸ்லாமிய வருடக் கணிப்பில் முதலாவது மாதமான முஹராம் மாதம் பெறுகிறது. அல்குர் ஆன் அருளப்பட ஆரம்பித்த மாதமான ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்பதை இறைவன் முஸ்லிம்களுக்கு கட்டாயமாக்கியுள்ளார் என்றாலும் முஹம்மது (ஸல்) அவர்கள் ரம்ழான் மாத நோன்புக் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் அடைந்து கொள்கின்ற நன்மைகளுக்கு மேலதிகமான நன்மைகளை அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் உபரியான (ஸ்ன்னத்) நோன்புகளை ரம்ழான் மாதம் தவிர்ந்த இதர மாதங்களில் நோற்றுள்ளார்கள். அவ்வாறு நோற்றப்பட்டதும் ஊக்குவிக்கப்பட்டதுமான நோன்புகளில் ''ஆஷூரா' நோன்பும் அடங்கும். முஹார்ரம் மாதத்தின் பத்தாம் நாள் நோற்கப்படுவதே ஆஷூரா நோன் பும் இது கட்டாயக் கடமையல்ல ஆனால் அல்லாஷ்விடம் அதிக நன் மைகளைப் பெற்றுத்தரக்கூடியது. இஸ்லாத்துக்கு முன்னர் யூதர்களும் கிறிஸ்தவர்களும் இத்தினத்தில் நோன்பு நோற்கக் கூடியவர்களாக இருந்துள் ளனர்.

மக்காவைத் துறந்து மதீனாவுக்கு முஹம்பது நபி (ஸல்) அவர்கள் "ஹஜ்ரத்" சென்ற சமயம் இத்தினத்தில் (முஹர்ரம் 10 ஆம் நாள்) யூதர்கள் நோன்பு நோற்பதைக் கண்டார்கள் அதற்கான காரணத்தை யூதர்களிடம் வினவிய போது பிர் அவ்னையும் அவனது கூட்டத்தையும் (நைல் நதியில்) மூழ்கடித்து மூஸா (அலை) அவர்களையும் அவர்களது கூட்டத்தினரையும் காப்பாற்றி அல்லாஹுத்த ஆலா கண்ணியப் படுத்திய தினம் இது. அதனால அல்லாஹவுக்கு நன்றி செலுத்த மூஸா (அலை) இத் தினத்தில் நோன்பு நோற்றார்கள் அதனால் நாங்களும் அதனால் நாங்களும் இத் தினத்தில் நோன்பு நோற்கிறோம் என்றார்கள்.

**முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலில் நோன்பு நோற்போம்**

அப்போது முஹம்மது (ஸல்) அவர்கள் முஸா (அலை) அவர்களைக் கண்ணியப் படுத்துவதற்கு உங்களை விடவும் நாங்களே சிறந்தவர்கள் என்று கூறிவிட்டு ஸஹாபாக்களை நோக்கி "முஹர்ரம் பத்தாம் நாள் நோன்பு நோற்குமாறு'' கூறினார்கள். அச்சமயம் ஸஹாபாக்கள்'' யூதர்களும் கிறிஸ்தவர்களும் இத்தினத்தில் நோன்பு நோற்று அதனை கண்ணியப்படுத்துகின்றனரே என்றனர். அப்போது முஹம்மது (ஸல்) அவர்கள் "அல்லாஹ் நாடினால் அடுத்த வருடம் ஒன்பதாம் நாளும் நான் நோன்பு நோற்பேன் என்றார்கள். ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அடுத்த வருட (முஹர்ரம் மாதம்) வருவதற்குள் வபாத்தாகி விட்டார்கள்.

எனவே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் " நீங்கள் ஆஷூரா தினத்தில் (முஹர்ரம் பத்தாம் நாள்) நோன்பு பிடியுங்கள்'' அவர்களுக்கு மாறு செய்வதற்கு (யூதர் களது நோன்பிலிருந்து எமது நோன்பு வித்தியாசப்பட வேண்டும் என்பதற்காக முஹர்ரம் பத்தாம் நாளுக்கு முந்திய நாள் அல்லது பிந்திய நாளிலும் நோன்பு பிடியுங்கள்'' என்று கூறியதாகவும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள் "ஆஷூரா தினத்தில் (முஹர்ரம் 9 ஆம் 10 ஆம் 11 ஆம் தினங்கள்) நோற்கப்படும் நோன்பு கடந்த வருடத்தில் செய்த சிறிய பாலங் களை அழித் விடும் '' என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த முஹர்ரம் மாதத்தில் தான் முஸ்லிம்களின் மக்காவிலிருந்து மதீனா நோக்கிய ஹிஜ்ரா பயணம், பிர்அவ்னை அல்லாஹ் அழித்தமை, இப்றாஹிம் நபி அவர்களை அல்லாஹ் நெருப்பிலிருந்து பாதுகாத்தமை கர்பலா யுத்தம் போன்ற பல இஸ்லாமிய நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

நபி மூஸா (அலை) அவர்களைக் கண்ணியப்படுத்திய அல்லாஹ்வை




மேன்மைப்படுத்தி நன்றி உள்ளவர்களாக நடந்தகொள்ள வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். அதுவும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எதிர்வு கூறிய அந்த நாள்களில் குறிப்பிட்ட ஆஷ்ரா நோன்பை நோற்க வேண்டியது மிகப் பிரதானமானதாகும். இதனை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருக் வேண்டும்.

ஆல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ்
மௌலவி (காஸிமி)
யாழ்/கிளிநொச்சி மாவட்ட
உலமா சபை தலைவர்
யாழ்ப்பாணம்.

தண்டனையை இரத்துச் செய்யும் நடவடிக்கையில்

# எரிமலை வெடிக்கு முன் இந்திய அரசு செயற்படட்டும்

## – குமுறுகிறார் திராவிடர் கழகத்தலைவர் வீரமணி



தமிழக மீனவர்கள் ஐவருக்கு இலங்கையில் விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச் செய்ய இந்திய அரசு துரிதமாக செயற்பட வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

2011 நவம்பர் 28 அன்று இராமேஸ்வரத்தில் இருந்து 712 விசைப்படகுகள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தன.

அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், தங்கச்சிமடத்தை சேர்ந்த கிளாடுவின் படகில் சென்ற மீனவர்கள் எமர்சன், பிரசாந்த், வில்சன், அகஸ்டிஸ், லாங்நைட் ஆகியோரை சிறைப் பிடித்துச் சென்றதுடன்.

இலங்கை கடற்படை சார்பில் எல்லை கடந்ததாக உங்களைக் கைது செய்து இலங்கை காவல் துறையிடம் ஒப்படைப்பதாகத் தான் தெரிவிக்கப்பட்டது,

ஆனால் தற்போது மீன்பிடிப் படகில் ஹெராயின் போதைப் பொருளைக் கடத்திச் சென்று நடுக்கடலில் பைபர் கிளாஸ் படகில் காத்திருந்த இலங்கையைச் சேர்ந்த மூவரிடம் கொடுத்ததாகவும், எட்டுப் பேரும் போதைப் பொருள் கடத்திய வழக்கில் கைது செய்யப்பட்டதாகவும் இலங்கை அரசு தரப்பில் கூறப்பட்டது.

இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டில் மட்டுமல்ல - உலகம் முழுவதும் உள்ள தமிழர்களையும் கடந்து மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அளவுக்கு அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் இந்திய அரசு தொடர்ந்து காட்டி வரும் அலட்சியப் போக்கு எவ்வளவு பெரிய விபரீதமான விளைவைக் கொடுத்துள்ளது என்பதை நினைத்தால் வேதனையும், கோபமும் பீறிட்டுக் கிளம்புகின்றன.

எனவே எந்தளவுக்கு கடுமையான அணுகுமுறை மேற்கொள்ளப்பட வேண்டுமோ, அந்த எல்லை வரைக்கும் செல்ல இந்திய அரசு கடமைப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை என்பது இந்திய அரசை அச்சுறுத்தவே என்பதில் ஐய்யமில்லை.

என்ன செய்யப் போகிறது மத்திய அரசு? தமிழ்நாடே கட்சிகளை மறந்து பொங்குமாக்கடலாக பொங்கி எழுந்து விட்டது அரசு ரீதியாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

இன்னமும் இராஜதந்திரம் தானா? வெளிநாட்டுப் பிரச்சினை என்ற நெளிவு சுழிவுக்குள் பதுங்கிக் கொள்ளப் போகிறதா? மக்கள் எரிமலை வெடிக்குமுன் மத்திய அரசு விரைந்து செயற்படட்டும்! செயற்படவும் வேண்டும். இவ்வாறு தனது அறிக்கையில் எரிமலையாக குற்றி எழுந்துள்ளார் கி.வீரமணி.

# நிலவு பற்றிய ஆராய்ச்சியில் சீன விஞ்ஞானிகள் சாதனை

நிலவு பற்றிய ஆய்வுக்காக, சீனா அனுப்பிய ஆளில்லா செயற்கைகோள், வெற்றிகரமாக மீண்டும் பூமியை வந்தடைந்தது. இதன் மூலம், சீனா புதிய சாதனை படைத்துள்ளது.

பூமியின் துணைக் கோளான நிலவைப் பற்றிய பல அரிய தகவல்களை அறிவதற்காக, சீனா, சமீபத்தில், ஆளில்லா செயற்கைகோளை விண்ணில் ஏவியது. இந்த செயற்கைகோள், நிலவின் சுற்றுவட்டப் பாதையில் பயணித்து, நிலா, பூமியை பல்வேறு கோணங்களில் படம் எடுத்தது.

சீன விஞ்ஞானிகள் திட்டமிட்டபடி, அந்த ஆளில்லா செயற்கைகோள், நேற்று, பூமியை வந்தடைந்தது. சீனத் தலைநகர், பீஜிங்கிலிருந்து, 500 கி.மீ., தொலைவில் இந்த செயற்கைகோள் தரையிறங்கியது. “செயற்கைகோள் எடுத்த, படங்கள் நிலா பற்றிய ஆராய்ச்சியில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும் என, சீன விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள், நிலவு குறித்த ஆய்விற்காக அனுப்பிய செயற்கைகோள்களை பூமியில் பத்திரமாக தரையிறக்கின. தற்போது, அந்த பட்டியலில் சீனாவும் இணைந்துள்ளது. இதன் மூலம், நிலவு பற்றிய ஆய்வில், சீன விஞ்ஞானிகள் புதிய சகாப்தம் படைத்துள்ளனர்.

# பாகிஸ்தான் இராணுவ மோதலில் தலிபான் தீவிரவாதிகள் 20 பேர் பலி

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் பழங்குடியின மக்கள் வாழும் வாஜிரிஸ்தான் பகுதி, தலிபான் தீவிரவாதிகளின் புகலிடமாக உள்ளது. இங்கு தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை என்ற பெயரில், அமெரிக்காவின் ஆள் இல்லா விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி வருகின்றன. இதில் ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்காவுடன் 'ஜார்ப் இ ஆஜ்ப்' என்ற பெயரில் தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கையை பாகிஸ்தான் இராணுவம் கடந்த ஜூன் மாதம் மத்தியில் ஆரம்பித்து மேற்கொண்டு



வருகிறது. இந்த தாக்குதல்களில் இதுவரை 1,100இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், வடமேற்கு வாஜிரிஸ்தானில் தன்னாட்சி பகுதியாக உள்ள ஆராக்சாய் பழங்குடியினர் பகுதி, தலீபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிற பகுதியாக திகழ்ந்து வந்தது.

ஷிரின் தாரா என்ற இடத்தில் தலீபான் தீவிரவாதிகளை தேடும் பணியில் நேற்று முன்தினம் இராணுவம் ஈடுபட்டது. அப்போது தீவிரவாதிகளுக்கும், ராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது.

இரு தரப்பினரும் கடும் துப்பாக்கிச்சண்டையில் ஈடுபட்டனர். இந்தச் சண்டை பல மணி நேரம் நீடித்தது. முடிவில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் இராணுவ வீரர்கள் 6 பேர் உயிரிழந்தனர். 5 பேர் படுகாயம் அடைந்தனர். இதன்காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவிகள் மதம்மாற்றப்பட்டு திருமணமும் நிறைவடைந்துள்ளது

## போகோஹறம் தீவிரவாதிகள் அறிவிப்பு



போகோள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 219 பாடசாலை மாணவிகள் முஸ்லிம்களாக மதம் மாற்றப்பட்டு திருமணம் செய்தும் வைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அபூபக்கர் ஷேக்காஷ வீடியோ செய்தி மூலம் தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 14ஆந் திகதி பள்ளி விடுதியில் இருந்து 276 மாணவிகளை கடத்திச் சென்ற போகோ ஹரம் தீவிரவாதிகள் அவர்களை மறைவிடத்தில் சிறை வைத்தனர்.

தீவிரவாதிகளின் பிடியில் இருந்து தப்பிவந்தவர்கள் போக மீதமுள்ள 219 மாணவிகளை 'செக்ஸ்' அடிமைகளாக விற்கப் போவதாக அந்த அமைப்பினர் மிரட்டல் விடுத்தனர். இது உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

நைஜீரிய இராணுவத்தால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. என்பதால் அவர்களை மீட்க அமெரிக்கா இராணுவத்தை அனுப்பியுள்ளது. இந்நிலையில், நைஜீரிய அரசு கடந்த வாரம் தீவிரவாதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதாகவும், போர் நிறுத்தத்துக்கு போகோ ஹரம் இயக்கத்தினர் ஒப்புக் கொண்டுள்ளதாகவும், கடத்தி வைத்துள்ள 219 மாணவிகளை விடுதலை செய்ய அவர்கள் சம்மதம் தெரிவித்து விட்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த தகவலை மறுத்துள்ள போகோ ஹரம் இயக்கத்தின் தலைவனான அபூபக்கர் ஷேக்காவு நேற்றுமுன்தினமிரவு ஒரு வீடியோ செய்தியை வெளியிடுள்ளனர்.

கடத்தப்பட்ட மாணவிகள் தொடர்பான விவகாரம் நெடுநாட்களுக்கு முன்னரே மறந்து போன விவகாரம் என்றும் அவர்கள் அனைவருக்கும் நான் எப்போதோ திருமணம் செய்து வைத்து விட்டேன் என்றும் அந்த வீடியோவில் சிரித்துக் கொண்டே கூறும் அபூபக்கர் ஷேக்காவு, 'இந்தப் போரில் பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை' எனவும் உறுதிப்பட தெரிவித்துள்ளான்.

# தீவிரவாதியை அடித்துக்கொன்று உண்டனர் கொங்கொங் மக்கள்

கொங்கோவில் தீவிரவாதி என சந்தேகப்பட்ட நபர் ஒருவரை பொதுமக்கள் சேர்ந்து அடித்து கொன்றதுடன், சமைத்து சாப்பிட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆபிரிக்காவின் கொங்கோ நாட்டில் உள்ள கம்பியா சூ (Gambiya shu) என்ற கிராமத்தில் 'எ.டி.எப்.' (ADF)என்ற அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் மக்களை கொன்று குவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பெனி(Beni) நகரில் பேருநதில் பயணித்த பொதுமக்கள், அவர்களுடன் பயணித்த நபர்



ஒருவரின் மீது சந்தேகமடைந்து தங்களது மொழியில் அவனிடம் பல கேள்விகளைக் கேட்டனர் ஆனால் அவன் பதில் ஏதும் கூறிவில்லை. இதனால் அவன் தீவிரவாத குழுவை சேர்ந்தவன் என நினைத்த மக்கள் அவனை பேருந்திலிருந்து இழுத்து கீழே தள்ளி கல்லால் அடித்து கொன்று, அவனை எரித்த துடன், அந்த உடலின் சில பாகங்களை சாப்பிட்டுமுள்ளனர்.

இதற்கிடையே அடித்து கொல்லப்பட்ட ஜோசப் கபிலா என்ற நபர் தீவிரவாதியா? என பொலிஸ் தரப்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

உலகச் செய்திகள்

# ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுக்கொடுப்பதே நோக்கம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



மக்களுக்கு சரியானதும், உண்மையானதுமான வழியைக் காட்டும் அதேவேளை, ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதுமே எமது முக்கிய நோக்கமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் இலங்கை மின்சார சபையின் சாரதிகள் ஒரு தொகுதியினருக்கு நியமனப் பத்திரங்களை நேற்று வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் வகையில் உதவிகளையும், அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் நாம் நீண்டகாலமாக முன்னெடுத்து வருகின்றோம.

அந்த வகையில் தான் கிடைக்கப் பெறுகின்ற வாய்ப்புக்களை பயன்படுத்தி அவற்றின் ஊடாக வேலைவாய்ப்புகளையும் வழங்கி வருகின்றோம்.

இவ்வாறு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதன் நோக்கம் இளம் சந்ததியினர் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை சுபீட்சத்துடன் எதிர்கொள்ளும் அதேவேளை, அவர்கள் சார்ந்து வாழ்வோரின் வாழ்க்கையையும் மேம்படுத்த வேண்டும்.

இந்நிலையில் தான் இவ்வாறானதொரு வாய்ப்பின் ஊடாக நியமனங்களை வழங்கியுள்ளோம். அதன்பிரகாரம் செய்யும் தொழிலே தெய்வம் என மதிக்க வேண்டும் என்பதுடன் பணிபுரியும் இடங்களில் அதிகாரிகளுக்கும், சக பணியாளர்களுக்கும் மதிப்பளிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி மக்களுக்கான சேவைகள் முழுமையாக கிடைக்கப்பெறும் வகையில் அர்ப்பணிப்புடனும், விடாமுயற்சியுடனும் உற்சாகமாகப் பணியாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

அதுமட்டுமன்றி மக்களுக்கு சரியானதும் உண்மையானதுமான வழியைக் காட்டும் அதேவேளை, வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் எமது நல்நோக்கிற்கும் நீங்கள் பக்கபலமாக விளங்க வேண்டும் என்பதுடன், அதன்வழியே மக்களையும் வழிநடத்த வேண்டிய பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே எமது நோக்கமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது இலங்கை மின்சார சபையின் III ஆம் தர சாரதி பதவிக்கு 11 பேர் நியமனம் பெற்றுள்ள நிலையில் அவர்களுக்கான நியமனப் பத்திரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார். நியமனப் பத்திரங்கள் வழங்கி வைத்த அமைச்சர் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

### மரணதண்டனை தீர்ப்பை...

மொன்றை மேற்கொண்டனர். யாழ்.ஆயருக்கான மகஜரை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரிடம் கையளித்தனர்.

மண்டைதீவு மற்றும் குருநகர் பகுதியைச் சேர்ந்த குறித்த மீனவர்களது உறவினர்கள் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தின் முன்பாக ஒன்று கூடி சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து யாழ்.ஆயருக்கான மகஜரைக் கையளிக்க அவர்கள் முற்பட்ட சமயம் யாழ்.ஆயர் இல்ல அதிகாரி ஒருவர் ஆயரிடம் மகஜர் கையளிப்பதானால் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்று கூறி நுழைய விட மறுக் கவே உறவினர்கள் அதனையும் மீறி உள்ளே நுழைந்து யாழ்.ஆயர் அலுவலகம் வரை சென்றனர்.

அங்கே யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் மீனவர்களது உறவுகளுடன் கலந்துரையாடி மகஜரைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், இன்று காலை ஆயரைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாக மீனவர்களின் உறவினர்களிடம் தெரிவித்து மீனவர்களின் குடும்பத்தாரை அதில் கலந்து கொள்ளுமாறு கூறினார். மேலும் ஆயர் ஊடாக மீனவர்களது மரண தண்டனையை ஆயுள் தண்ட னையாக்குவதற்கு முயற்சி மேற்கொள்வதாகவும் தெரிவித்து மீனவர்களின் உறவுகளை அங்கிருந்து செல்லுமாறு கோரியதை அடுத்து அவர்கள் அங்கிருந்து சென்றனர். (பா)

### மீனவருக்கான...

இல்லத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தி யாழ். ஆயருக்கான மகஜரை வழங்கிய வேளை அதனைப் பொறுப்பேற்றுக்கொண்ட அவர் மீனவர்களது உறவுகளிடம் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்களது உறவுகள் கலந்து கொண்ட இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மீனவர்களது தண்டனைக் குறைப்பிற்கு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது ஒன்றே வழியாகும்.

ஆயர் மூலமாக மீனவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக்க முயற்சி செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

இதனை விடுத்து நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகச் செயற்பட்டால் எதுவும் நடந்து விடாது என்றும் மீனவர்களது உறவுகளைக் கேட்டுக்கொண்டார். (பா)

### வட்டுக்கோட்டையில்...

தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவனின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

இவ்விபத்துக் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (பா, 90)

### பேச்சுக்கான...

அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆற்-றும் உரைகள் போதுமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதேனும் நிபந்தனைகள் இருந்தால் அது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேணடியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மரணதண்டனை...

டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் வைத்து அலுவலக நிர்வாகத்திடம் கையளித்தனர்.

இதில் மனைவி, பிள்ளைகள் உட்பட 150 இற்கும் மேற்பட் டோர் எமக்கு இரங்குங்கள் என்ற சுலோக அட்டைகளுடன் அலுவலக முன்றலில் கண்ணீர் சிந்தக் கவலையுடன் நின்று மகஜரைக் கையளித்தனர்.

### மீனவரின்...

கையளித்த உறவினர்களிடம் தெரிவித்ததாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய மீனவர்கள் தரப்பில் கூறப்படுவதுபோல நீதிமன்ற நடவடிக்கையில் சந்தேகம் எதனையும் இதுவரை எவரும் என்னிடம் எழுப்பவில்லை நான் விசாரித்த வரையிலும் அப்படியான சந்தேகம் எதனையும் காணமுடியவில்லை.

இந்த விடயத்தில் குரல் கொடுப்பவர்கள் இரு நாடுகளுக்குமிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தாதவாறு இதனைக் கையாள வேண்டும் அதுமாத்திரமன்றி, அவர்கள் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்வதில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்களுடன் நட்பை ஏற்படுத்தி நகை திருடியவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் பெண்களை ஏமாற்றி அவர்களின் நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை திருடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் பெண்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ளும் குறித்த சந்தேகநபர் புறக்கோட்டை பஸ் நிலையம் வரை அவர்களுடன் சென்று பொருட்களை திருடியமை தெரியவந்துள்ளது.

கந்தளாய் பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்

விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமரா காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஷிராணியை அழைக்கும் சோபித தேரர்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு மாதுளவாவே சோபித தேரரின் நீதியான சமூகத்திற்கான இயக்கம் கேட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, வேறு சில கட்சிகளும் அவரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாகவே அவரிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோருடன் போட்டியிடும் மூன்றாவது வேட்பாளராகவே அவரைப் போட்டியிடுமாறு கட்சிகள் கோரியுள்ளன.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும், மாதுளவாவே தேரரிற்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் முயல்வதாகவும் தெரியவருகின்றது.

எனினும் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதை தேரர் கடுமையாக எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொருத்தமான பொதுவேட்பாளர் ஒருவரை இனம் கண்டால் தான் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகத் தயார் என ரணில் விக்ரமசிங்க தனக்கு நெருக்கமான வட்டாரங்களிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் யார் என்பதில் கட்சிக்குள் இன்னமும் நிச்சயமற்ற நிலையே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வடக்கிற்கான பயணக் கட்டுப்பாடு தமிழருக்கு எதிரான நடவடிக்கை

## *என்கிறார் மன்னார் ஆயர்*

வடமாகாணத்துக்குச் செல்லும் வெளிநாட்டவர்களை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானமானது தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாகும் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்களுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள இந்த கட்டுப்பாடானது, ஆபத்தான நிலைமைக்கு இட்டுச் செல்லும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையானது, யுத்த காலத்தில் வடக்கில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை விட அதிகமாகும் என சுட்டிக் காட்டியுள்ள ஆயர், இதனால் பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் கூறினார்.

# பட்ஜெட்டிற்கு ஆதரவு அரசின் பதிலிலேயே உள்ளது

## *என்கிறது ஹெல உறுமய*

வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதா? இல்லையா? என்ற தீர்மானம், தமது கோரிக்கைக்கான அரசாங்கத்தின் பதிலைப் பொறுத்துள்ளது என ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

தாம் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு சரியான பதிலொன்றை அரசாங்கம் அளிக்காதிருந்ததனாலேயே இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லையென அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கருத்து வெளியிட்டுள்ளார்.

# வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இடமாற்றம்

கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தின் பின்புற வளவில் இயங்கிய வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் தற்போது கைதடியில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ்வரும் அலுவலகத்திற்கு இடம்மாறியுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களம் இயங்கிய கட்டடத்தில் யாழ் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்திற்கு கோப்பாய் பிரதேச செயலரால் நீர்வேலி தெற்கில் காணி ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளது. (90)

# காணாமற்போனோர் சாட்சியப் பதிவு; இரண்டாவது கட்டம் முல்லையில்



காணாமற்போனோர் தொடர்பாக சாட்சியப் பதிவுகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்றைய தினம் இரண்டாவது கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் சாட்சியப் பதிவுகளை மேற்கொண்டது.

ஆணைக்குழுவின் தலைவர் உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நேற்றுக்காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சாட்சியப் பதிவுகள் இடம்பெற்றன.

இதன்போது கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 57 பேர் விசாரணைக்கு அழைக் கப்பட்ட நிலையில் 41 பேர் சமூகமளித்தனர். இதில் 26 பேரிடம் சாட்சியப் பதிவு மேற்கொள்ளப்பட்டதுடன், 18 பேர் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இன்றைய தினமும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் விசாரணை இடம்பெறுவதுடன், நாளையும், நாளை மறுதினமும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் விசாரணை இடம்பெறவுள்ளது. (40)

# முதலாவது ஒருநாள் போட்டி இலங்கை அணி படுதோல்வி



(கட்டாக்)

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 169 ஓட்டங்களால் இலங்கை அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி, இந்தியாவை துடுப்பெடுத்தாடக் கேட்டுக் கொணடது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இலங்கை பந்துவீச்சை சிதறடித்து ஓட்டங்களை குவித்தனர்.

ரஹானே - தவான் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 231 ஓட்டங்களை குவித்தது.

தொடர்ந்து வந்தவர்களும் அதிரடியாக ஆட இந்தியா 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 363 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் ரஹானே 111, தவான் 113, ரெய்னா 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரண்டிவ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலளித்து ஆடிய இலங்கை அணி, இந்திய அணியின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 39.2 ஓவர்களில் 194 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 169 ஓட்டங்களால் தோலவியுற்றது. பந்துவீச்சில் இசாந் சர்மா 4, பட்டேல் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ரஹானே தெரிவானார்.

## பாப்பரசரின் விஜயத்திற்கு இறுதிக்கட்ட நடவடிக்கை

பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ்ஸின் இலங்கை விஜயத்திற்குத் தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வத்திக்கான் மற்றும் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை ஆகிய இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த வருடம் (2015) ஜனவரி 13 ஆம் திகதி பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனில் தங்கியுள்ள 3000 இலங்கையர் மாயம்

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள சுமார் 3000 இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் சுமார் 50 ஆயிரம் வெளிநாட்டு பிரஜைகள் சட்டவிரோதமான முறையில் தங்கி இருக்கின்ற போதும், அவர்கள் கைதுகள் மற்றும் நாடு கடத்தல்களில் இருந்து தப்பியுள்ளனர்.

கல்வி மற்றும் சுற்றுலா விசாக்களில் பிரித்தானியாவுக்குள் பிரவேசித்து, விசா காலம் நிறைவடைந்த பின்னரும் அங்கு இவ்வாறான எண்ணிக்கையானவர்கள் தலைமறைவாக வாழ்கின்றனர்.

அவர்களில் 3000 இலங்கையர்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்ற போதும், உறுதியான எண்ணிக்கை தெரியவில்லை.

அவர்களை தேடி கைது செய்து இலங்கைக்கே நாடு கடத்த முயற்சிக்கின்ற போதிலும், அவர்களின் குறித்த தகவல்கள் இல்லாததால் இதனை மேற்கொள்ள முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# மஞ்சள் கடவையை பயன்படுத்தாத பாதசாரிகளுக்கு தண்டப்பணம்

(கொழும்பு)

பாதையை கடக்கும் போது மஞ்சள் கடவையை பயன்படுத்தாத பாதசாரிகளுக்கு தண்டப் பண ரசீது வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மஞ்சள் கடவையை பயன்படுத்தாது பாதையை கடக்கும் பாதசாரிகளுக்கு தற்போது நீதிமன்றத்தின் ஊடாக எச்சரிக்கை மற்றும் தண்டப் பணம் அறவிடும் முறைமை தற்போது காணப்படுகிறது. இந்த முறைமையில் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் உள்ளிட்ட சிக்கல் நிலைமைகள் காணப்படுவதாகவும் அதனை கருத்திற்கொண்டே இம்முறைமையை மாற்றுவது தொடர்பில் ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாகனங்களை செலுத்தும் போது கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தும் சாரதிகள், ஆசனப் பட்டியணியாதவர்கள், வாகன கண்ணாடிக்கு கறுப்பு டிண்டட் ஸ்டிக்கர் ஒட்டுதல், வீதியில் போடப்பட்டுள்ள கோடுகளை கவனத்திற்கொள்ளாமல் வாகனத்தைச் செலுத்துதல் போன்ற குற்றங்களுக்கும் நீதிமன்றத்திலேயே ஆஜர்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான சிறு சிறு குற்றங்களுக்கு பொலிஸார் அவ்விடத்திலேயே தண்டப் பண ரசீது வழங்குவதன் மூலம் பொதுமக்களின் அசௌகரியங்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் காலதாமதங்களை தவிர்க்க முடியுமென்பதை கருத்திற்கொண்டே அந்த முறைமையை மாற்றியமைப்பது தொடர்பில் ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பு - யாழிற்கிடையில் 2 மேலதிக ரயில் சேவை

(கொழும்பு)

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான நாளாந்த ரயில் சேவைகளை அதிகரிப்பதற்கு ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பயணிகளின் வேண்டுகோளை கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவைக்கு, டிசம்பர் முதல் வாரம் வரையில் தற்போது ஆசன முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே வணிக அத்தியட்சகர் டபிள்யூ.எஸ்.சிசிர குமார குறிப்பிட்டார்.

இதற்கமைய தற்போது காணப்படும் 8 ரயில் சேவைகளுடன், இரண்டு மேலதிக ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவையால் கடந்த 17 நாட்களில் ரயில்வே திணைக்களத்திற்கு 200 இலட்சம் ரூபா வருமானம் கிட்டியுள்ளதாக ரயில்வே வணிக அத்தியட்சகர் மேலும் குறிப்பிட்டார்.

# புலிகளின் முன்னாள் உறுப்பினர் விமான நிலையத்தில் கைது

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். கட்டார் இராஜ்ஜியத்தில் தொழில் செய்து விட்டு நாடு திரும்பிய திருகோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அவர் கட்டார் நாட்டுக்குத் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்யும் முயற்சியில் தேவியன், கோபி ஆகியோருடன் தொடர்பில் இருந்ததாகவும் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தொடர்புகள் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவரிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# அரசாங்கத்திற்கு எதிராக மும்முனை தாக்குதல் முயற்சி

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிராக மும்முனைத் தாக்குதலுக்கான தயார்படுத்தல்கள் நடைபெறுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக மும்முனைத் தாக்குதல் ஏற்பாடுகள் நடைபெறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஒருபுறம், ஜே.வி.பி.யின் இடதுசாரித் தாக்குதல் ஒருபுறம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இனவாதத் தாக்குதல் ஒரு புறம் என்று மும்முனைத் தாக்குதல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட பொதுமக்கள் மத்தியிலிருந்து எழும் எதிர்ப்புச் சுனாமியில் ஐ.தே.க. விரைவில் அடித்துச் செல்லப்பட்டு விடும். எதிர்க்கட்சிகளின் அரசியல் பலவீனம் இந்த வரவு - செலவுத் திட்டத்திலேயே வெளிப்பட்டு விட்டது.

ஜனாதிபதியின் அரசியல் ஆளுமைக்கு முன்னால் எதிர்க் கட்சிகள் இனியும் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாது. வாக்குகளைக் குறிவைத்து அளிக்கப்பட்ட இலஞ்சம் என்று எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டினாலும் வரவு - செலவுத் திட்டத்தின் சாதகம் குறித்து பொதுமக்கள் நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர் என்றும் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

### வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு

# இந்தியா வழங்கும் வாகனங்கள் முதற்கட்டமாக வருகிறது – 07

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்தியா வழங்கும் வாகனங்கள் இந்த மாத இறுதிக்குள் வருகை தரவுள்ளன. முதற்கட்டமாக 7 வாகனங்களை வடக்குக்குக் கொண்டுவரத் தாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். வடக்கு மாகாண சபை கடந்த வருடம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியமைக்கப்பட்டது. இதில் தெரிவான 38 உறுப்பினர்களுக்கும் அன்பளிப்பாக வாகனங்களை வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்தது.

இந்த நிலையில் முதல் கட்டமாக 7 வாகனங்களை வடக்குக்கு கொண்டு வர இந்தியா முடிவு செய்துள்ளது. இதற்காக கொழும்பில் இருக்கும் வாகன இறக்குமதி நிறுவனங்கள் 7 இடமிருந்து கூறுவிலையைக் கோரியுள்ளது.

விரைவில் 7 நிறுவனங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து அதனூடாக வாகனங்களை அனுப்பவுள்ளது. இம்மாத இறுதிக்குள் அந்த வாகனங்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.